புதுவாழ்வு

ஆசிரியர்:—

க. அன்பழகன், எம்.ஏ.

This page is in colour

புதுவாழ்வு

மாலை 1	திருவள்ளுவர் ஆண்டு 1979 வைகாசி 1.	மலர் 5

ஆசிரியர் :—க. அன்பழகன் எம். ஏ.,

துணை ஆசிரியர்:—கே. ஜி. இராதாமணாளன்.

உள்ளுறை

மொழிப்போர் வெல்க! ... 2
பாரதிதாசன்

இன்பத் தமிழும்
இந்துத்தானியும் ... 5
தலையங்கம்

பொற்சிலை ... 16
தொடர்கதை

உறுதிப்பாடா ?
உடன்பாடா? ... 24
கருத்துரை.

ஜான் பிரௌன் ... 26
வரலாறு

உழத்தி ... 33
கவிதை

மலரில் விழுந்த வண்டு ... 34
இலக்கியக் காட்சி

உரைகல் ... 37

10, வேளாளர் தெரு,
புரசைபாக்கம்,
சென்னை-7.

விலை அணா 4

15—மே
1948

மொழிப்போர்

★

புரட்சிக்கவி

1) ஆங்கிலத்தைக் கற்கையிலும்
அயல் மொழியைக் கற்கையிலும்
எந்த நாளும்
தீங்கனியைச் செந்தமிழைத்
தென்னாட்டின் பொன்னேட்டை
உயிராய்க் கொள்வீர்
ஏங்கவைக்கும் வடமொழியை,
இந்தியினை எதிர்த்திடுவீர்
அஞ்ச வேண்டாம்.
தீங்குடைய பார்ப்பனரின்
ஆயுதங்கள் "இந்தி" "வட
சொல்" இரண்டும்.

2) சிங்கங்கள் வாழ்காட்டில்
சிறுநரிநாய் குரங்கெண்கு
சிறுத்தை யாவும்
தங்கி நெடுங் கூச்சலிடும்
தன்மைபோல் தமிழ்நாட்டில்
தமிழே யன்றி
அங்கங்கே அவரவர்கள்
தம்மொழிக்கும், பிறமொழிக்கும்
ஆக்கம் தேடி
மங்காத செத்தமிழை
மங்கும்வகை செய்வதற்கு
வழக்கும் சொல்வார்.

வெல்க!

—பாரதிதாசன்.

3) திருமிக்க தமிழகத்தின்
குடும்பத்தீர்! இல்லறத்தீர்!
செந் தமிழ்க்கே
வருமிக்க தீமையினை
எதிர்த்திடுவீர் நெஞ்சாலும்
வாய் மெய்யாலும்!
பொருள்மிக்க தமிழ் மொழிக்குப்
புரிந்திடுவீர் நற்றொண்டு;
புரியீராயின்,
இருள்மிக்க தாகிவிடும்
தமிழ் நாடும் தமிழர்களின்
இனிய வாழ்வும்!

4) விழிப்போரே நிலைகாண்பார்!
விதைப்போரே அறுத்திடுவோர்
களை காண்டோறும்
அழிப்போரே அறஞ்செய்வார்!
அறிந்தோரே உயர்ந்திடுவோர்!
ஆதல் ஆர்வம்
செழிப் போரே இளைஞர்களே,
தென்னாட்டுச் சிங்கங்காள்!
எழுக! நம்தாய்
மொழிப்போரே வேண்டுவது,
தொடக்கஞ் செய்வீர், வெல்வீர்
மொழிப்போர் வெல்க!

புதுவாழ்வு

(மாத வெளியீடு)

விலை விவரம்:-

தனி இதழ் அணு 4.

ஆண்டுக் கட்டணம் ரூபா 3.

விளம்பர விகிதம்:-

அட்டை	வெளிப்பக்கம்	ரூ.	120
,,	உள்பக்கம்	,,	80
உள்பகுதி	முழுப்பக்கம்	,,	60
,,	அரைப்பக்கம்	,,	30
,,	கால்பக்கம்	,,	20

தொடர்ந்து விளம்பரம் செய்ய விரும்புவோர் நேரில் எழுதுக.

விற்பனை இல்லாத ஊர்கட்கு முன் பணம் கட்டக்கூடிய விற்பனை யாளர்கள் தேவை.

எல்லா ரயில்வே ஹிங்கின்பாதம்ஸ் புக்ஸ்டால்களிலும் 'புது வாழ்வு' விற்கப்படும்.

மலேயா முழுமைக்கும்

திரு. ஏ. அங்கமுத்து,
தமிழ்நாடு புத்தக நிலையம்.
த. பெட்டி எண் 118,
6, ஈப்போ ரோடு,
கோலாலம்பூர், மலேயா.

என்பவர், விற்பனை உரிமையாள ராக அமைந்துள்ளதால் மலேயா தோழர்கள் விற்பனைக்கு அவருக்கே எழுதவேண்டுகிறோம்.

விவரங்கட்கு:

நிர்வாகி, "புதுவாழ்வு"
10, வேளாளர் தெரு,
புரசபாக்கம், சென்னை-7.

புதுவாழ்வு

இன்பத் தமிழும் இந்-துத்-தானியும்

எந்த நாடும் இனமும் முன்னேற அந்நாட்டின், இனத்தின் மொழியும் வளர்ச்சியுற்றாக வேண்டும். மொழியின் வளர்ச்சி அதில் வழங்கும் கருத்துக்களையும் கொள்கைகளையும், அதன் எழுச்சியூட்டும் ஆற்றலையும், பயில்வதிலே உள்ள எளிமையையும், பயில்வதற்குரிய வாய்ப்புக்களையும் அம்மக்களின் தாய் மொழிப் பற்றையுமே பொருத்திருக்கிறது.

மக்களுக்கு மொழிப்பற்று தேவை, மொழி வளர்ச்சியுற வேண்டுமானால். மொழியின் வளர்ச்சியே மக்கள் முன்னேற்றத்திற்கு இன்றியமையாதது. எனவே மொழி வளர்ச்சியும் மக்கள் முன்னேற்றமும் ஒன்றை ஒன்று தழுவியுள்ளது. தாய் மொழிப் பற்றே தாய் நாட்டுப் பற்றுக்குக் காரணமாவதால், மக்கள் முன்னேற்றத்திற்கும் எழுச்சிக்கும் தாய்மொழிப் பற்று வளர்க்கப்பட்டாக வேண்டும்.

ஒரு நாட்டு மொழியை அடிமைப் படுத்தி அழித்தொழிப்பதே, அந்நாட்டாரை அடக்கி ஆளும் வழி என்பதை அந்நிய நாடுகளை அடிமைப்படுத்தி ஆளத்தொடங்கிய கூட்டத்தார் கண்டு கையாண்டனர். நம்முடைய நாட்டைப் பொருத்த வரையில், ஆளவந்தவர்கள் மட்டுமின்றி, அண்டவந்தவர்கள் கூட, படையெடுத்து வென்றவர் மட்டுமின்றிப் பல்லிளித்து உயிர் பிச்சை பெற்றவர்கள்கூட, வாளேந்தியவர்கள் மட்டுமின்றித் தாளேந்தியவர்கள் கூட, சீப்பும் சோப்பும் விற்க வந்தவர்கள் மட்டுமின்றி, தர்ப்பையும் பஞ்சாங்கமும் தாங்கி வந்தவர்கள் கூட, ஆஸ்திரேலியா, அமெரிக்கா கண்டங்களைக் கண்டு பிடித்தவர்கள் மட்டுமன்றி ஆடுமாடுகளை மேய்க்கப் பசும் புற்றரை தேடி நுழைந்தவர்கள்கூட இந்த உண்மையை உள்ளத்திலே கொண்டு தாங்கள் குடியேறிய இடத்து மொழியைச் சீரழிப்பதில் அன்றுமுதல், இன்றுவரை முனைந்திருக்கின்றனர்.

தமிழ் மொழியின் வரலாறு உணர்ந்தோர், தமிழ் மொழி ஏற்றங்குறைந்து, எடுப்பார் கைப்பிள்ளையாகி, மற்றும் பல மொழிகளாகத்திரிய நேரிட்டதே-ஆரியர்தம் நுழைவாலும் ஆரியமொழிக் கலப்பாலுமே

என்பதை ஒப்புக்கொள்வர். தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு ஆகியமொழி கள் அனைத்தும் உறவுடைய ஓரின மொழிகள் என்றாலும் ஒரு மொழி பேசுவோர் மற் றொரு மொழியினைப் புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு, அந்நியமொழி என்று கருதும் அளவுக்கு, ஆரியத்தின் கலப் பால் வேறுபட்டுப் பிரிந்து விட் டன என்பதை எவரும் மறுக்க முடியாது.

இந்நிலையில், தமிழர்களாகிய நாம் இருநூறு ஆண்டுகளாக அடிமைப்பட்டிருந்த வெள்ளை யரிடமிருந்து விடுதலை பெற் றுள்ள போதிலும், இரண்டா யிரம் ஆண்டுகளாக ஆதிக்கம் செலுத்திவரும் ஆரியத்தின் பிடியினின்றும் விடுபட்ட பாடில்லை.

நமது மொழி வளர்ச்சிக்காக நாட்டில் சிலபல முயற்சிகள் நடைபெறுகின்றன. நாடாள் வோரும் கல்வித் துறையில் சில சீர்திருத்தங்கள் செய்யமுன்வந் துள்ளனர். ஆனால் அவை முழுப் பயன் விளைவிக்குமா என்பது கேள்விக்குரியதாகும்.

அத்தகைய ஒரு திட்டத்தின் படி-தொடக்கப் பள்ளிகளில் (5-வது வகுப்புவரை) இனி-ஆங்கிலத்திற்கு இடமே இல்லை. தாய்மொழி (மண்டலமொழி) மட்டுமே பயிற்றுவிக்கப்படும். இடைநிலைப் பள்ளிகளில் (1-ம் படிவம் முதல் 3-ம் படிவம் வரை) ஆங்கிலம் இரண்டாவது மொழியாகவும், இந்துஸ்தானி மூன்றாவது மொழியாகவும் பயிற்றுவிக்கப்படும். உயர் நிலைப் பள்ளிகளில் (4வது படி வம் முதல் 6வது படிவம் வரை) மூன்றாவது மொழி இடம் பெறும் பள்ளிகளில் இந்துஸ் தானி பயிற்றுவிக்கப்படும்.

மூன்றாவது மொழியாகப் பொதுமொழியாம் இந்துஸ் தானி-உருது, பழம்புகழ் மொழி, அந்நியமொழி என்ற வகையில் அடங்கும் ஏதேனும் ஒரு மொழியைப் பயின்றாக வேண்டும் மாணவன். அதில் தேர்வும் உண்டு. இந்தக் குழு விலேதான் இந்துஸ்தானியும் இடம் பெறுகிறது என்றபோதி லும், இமமொழியைப் பள்ளிக் கூடங்கள் கட்டாயமாகப் பயிற்று வித்தே ஆகவேண்டும். இந்துஸ் தானி மாணவர்கள், அவரவர் விருப்பப்படி-தேவநாகரி அல் லது பாரசீக எழுத்துக்களைப் பயிலலாம் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

இடைநிலைப் பள்ளியிலும் உயர்நிலை பள்ளியிலும், மொழி தவிர்த்த பிறபாடங்கள் அனைத் தும்-அந்தந்த மண்டல மொழி களிலேயே பயிற்றுவிக்கப்படும். எனவே-இடைநிலை உயர்நிலைப் பள்ளிகளிலும், இனி தாய் மொழியே முதல்மொழி என்ப தோடு பிறபாடங்களையும் பயிற் றுவிக்கும் மொழியாகையால் ஆங்கிலம் இதுவரை பெற்றி ருந்த இடத்தைத் தமிழ் அடை கின்றது.

இச் சூழ்நிலைக் கேற்ப-கல்லூரிகளில், ஓர் ஐந்தாண்டு காலத்திற்குள், கலைகள் யாவும், அறிவியல் கல்விமுழுவதும், அந்தந்த மண்டல மொழிகளிலேயே பயிற்றுவிக்கத் தொடங்குவதற்கான திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு தொடக்கமுதல்-இறுதிவரை - கல்வித்துறையில் தாய்மொழி முக்கியத்துவம் காண மகிழ்கின்றோம்.

ஆனால் அதன் காரணமாக, ஆங்கிலம் அடியோடு புறக்கணிக்கப்பட வேண்டிய அவசியம் இல்லை. பள்ளிக்கூட பாடத்திட்டத்தில் சேர்க்காவிடில்ன்றோ புறக்கணிக்கப்பட்டதாகும்; ஆங்கிலந்தான் இரண்டாவதுமொழியாக இடம்பெறுகிறதே என்று கூறுவர் பலர். ஆங்கிலம் இரண்டாவது மொழி என்ற பெயரோடு கல்வித்துறையில் இடம் பெறுகிறதே தவிர்த்து, அம்மொழியைக் குறைவாக எந்த அளவு பயின்றால் தான் அம்மொழியைப் பயின்றதனால் ஆகியபலன் சிறிதேனும் கிடைக்குமோ அந்த அளவு பாடத்திட்டத்தில் சேர்க்கும் நோக்கம் இருப்பதாகத் தெரியவில்லை. அவர்களது நோக்கந்தான் இந்துஸ்தானிக்கு இடந்தேடுவது எப்படி என்பதிலேயே ஈடுபட்டுள்ளதே!

இன்றைய உலகப் போக்கில், அறிவியல் பெருக்கில் 'ஆங்கிலம்' மேலும் ஆக்கம் பெற்று வருவதோடு அகிலஉலக மொழியாக உருவாகின்றது. உலக மக்கள் யாவருமே, ஒன்றுகூடி ஒரு மொழிவைத்து உலகாளத் தீர்மானிப்பார்களானால், அது ஆங்கிலமாகத்தான் இருக்கமுடியும். ஆங்கிலத்தைப் பயன்படுத்தி வாழும் மக்கள் பலராவர் என்பதனாலே மட்டுமன்றி-ஆங்கிலமே, பல கலைகளும் வளர்ந்து பல் வளமும் நிரம்பிய மொழியாகும் என்பதனாலேயே ஆகும். மொழி இலக்கணப்படியோ ஒலிச் சிறப்புப்படியோ தன்னிகரில்லாத தமிழுக்கு ஆங்கிலம் இணையாகாது என்றாலும், விஞ்ஞான சாதனங்களிலே தவழ்ந்து விளையாடி, அகில உலக அரசியல் அரங்குகளிலும் நடம்புரிகின்ற அளவிற்கு, இன்றைய ஆங்கிலம் அறிவியல் வாழ்விற்கு ஏற்ப வளர்ச்சியுற்ற மொழியாகத் திகழ்கின்றது. அத்தகைய ஆங்கிலம்-நம்மை அடிமைப் படுத்தி ஆண்டவர்க்கத்தின் தாய்மொழியாயிற்றே என்பதற்காக நாம் அதைப் பயின்றும் பயனின்றிக் கழிய விடுவது அறிவுடைமையாகாது. அம்மொழியை எந்தக் குறைந்த அளவிற்கு நமது கல்வித் திட்டத்தில் இடம் பெறச் செய்தால், அம் மொழியைப் பயிலச் செலவிட்ட பொழுதும் பொருளும் பாழாகாது, பயன் நல்குமோ-அந்த அளவிற்குக் குறையாமல், அதற்கு இடமளிக்க வேண்டும்.

நம் நாட்டிலேயே, ஓரளவு விடுதலை உணர்ச்சியும் அறிவு வேட்கையும், சமத்துவ நோக்க

மும், புத்துணர்ச்சியும், புது எழுச்சியும் ஏற்பட 'ஆங்கிலம்' துணை செய்திருக்கிறது என்பதையும் மறந்து விடக்கூடாது. இந்தத் துணைக்கண்டத்தில் பிறந்து உலகப் புகழ்பெற்ற உத்தமர் காந்தியார், உரிமைப் போரில் உயிர் துறந்த சுபாஷ், ஒரு கோகலே, ஒரு திலகர், ஒரு சிதம்பரனார், ஒரு திபாகரராயர் ஒரு தாகூர், ஒரு நேரு, ஒரு சரோஜினி, ஒரு ஆசாரி, ஒரு ஜின்னா, ஒரு ராய், ஒரு அம்பேத்கார், ஒரு இராமன், ஒரு சண்முகம், ஒரு இராமசாமி, என்று இன்னோரன்ன பல்லோரும், இத்தனைத் திறத்தோரும் தோன்றத் துணையாக அமைந்ததே ஆங்கிலக்கல்வி என்பதை மறுத்து விடமுடியாது.

ஒருகணம் நினைத்துப்பாருங்கள், ஆங்கிலக்கல்வி இல்லையானால், இவர்கள் இன்று எப்படி உலாவுவார்கள் என்பதை. காந்தியார்-உத்தமராகவே வாழ்ந்தாலும் உத்தமரின் புகழ் உலகம் அறிந்திருக்காது. பிரதமர் நேரு -ஒரு பாஷா பண்டிதராகவும், கவி-சரோஜினி ஒரு இசை வாணியாகவும், விஞ்ஞானி இராமன்-ஒரு வேதாந்தியாகவும், கவர்னர் ஆச்சாரியார்-ஒரு கோவில் அர்ச்சகராகவும், திவான் இராமசாமி-ஒரு பண்ணை மிராசுதாரராகவும், அமைச்சர் சண்முகம் - ஒரு தமிழ்ப் புலவராகவுந் தான் ஆகியிருப்பார்கள். இவர்களெல்லாம், இந்த அளவிற்குச் சிறப்புற மட்டுமென்றி-நாட்டின் நிலை உயரவும், விடுதலை கிடைக்கவும் ஆங்கிலமே பெரிதும் துணையாயிற்று.

எனவே ஆங்கிலம் நம்மவரால் பக்தி சிரத்தையுடன் போற்றப்படவேண்டும் என்பதல்ல; பயனுள்ள ஒருமொழி என்பதை அறிந்திருந்தும், ஓரளவு பயின்றிருந்தும், இன்று பயன் கொள்வதற்குரிய அடிப்படைத் தகுதியைக் கூடப்பெறவியலாத வகையில் கல்விமுறை அமைந்துவிடக்கூடாது என்பதே நோக்கமாகும்.

நான்கு வேதம், ஆறு சாத்திரம், பதினெண் புராணம், அறுபத்துநான்கு கலைஞானம், ஆகியவை மட்டுமோ, இராமாயணம், பாரதம், சித்தாந்தம், பிரபந்தம், ஆகியவை மட்டுமோ, வேதபாடசாலை தேவார பாடசாலை, ஆலமரத்தடி, ஆற்றங்கரையோரம், குருவினது குடில், சரஸ்வதி கடாட்சம், காளியின் அருள் ஆகியவை மட்டுமோ, நம்நாட்டை, நாட்டு மக்களை இந்த அளவிற்கு உயர்த்தி இருக்க முடியாது. ஆங்கிலமும் அதனோடு இணைந்து நின்ற விஞ்ஞானமுமே, நம்மை முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைக்கச் செய்துள்ளன.

எனவேதான் தாய்மொழிப் பயிற்சியின் அளவு ஆங்கிலப் பயிற்சி அளிக்கவியலாவிடினும், இன்றைய கல்லூரிப் பட்டதாரி பெறுகின்ற ஆங்கிலத்தகுதி

அளவேனும், வருங்காலத்திட்டத்தின் படியும் தகுதிபெறச் செய்ய வேண்டும். இல்லையாயின் அரைகுறைப் படிப்பு அரை வயிற்றுக் கஞ்சிக்கும் ஆகாது என்று கூறிய பழமொழியைப் போல், அரைகுறை "ஆங்கிலக் கல்வி" அறிஞனாக விளங்கத் துணையாகாது. தொடக்கப் பள்ளியில் இரண்டு மூன்றாண்டுகள் மட்டுமே பயின்று நின்று விடும் சிறுவர்கள் பின்னர் பயின்ற எழுத்துக்களையே மறந்துவிடுவது போல் ஆங்கிலம் சிறிதளவே பயின்று வெளிவரும் உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் அம்மொழியறிவை வளர்த்துக் கொள்ளும் நோக்கமோ வாய்ப்போ தேவையோ இன்மையால் படித்ததையும் மறந்துவிடக் கூடும். பயிற்றுவித்ததும் பயனின்றி ஒழியலாம்.

மற்றும் - கல்வித் திட்டங்கள் வகுப்போர் இந்நாட்டின் நிலையை மனதிற் கொள்ளாது, தங்கள் உள்ளத்தில் கருதிக் கொண்டிருக்கிற ஒரு கற்பனைச் சித்திரத்தைக் கொண்டோ, அல்லது இன்றுள்ள பழைய அமைப்பையே மனதில் பதிய வைத்துக் கொண்டோ புதிய திட்டம் வகுப்பது அவ்வளவாகப் பயன் தராது.

நாட்டு மக்களுக்கு எது தேவை? அதை அடையச் செய்யும் வழியென்ன? அவ்வழியில் உள்ள தடைகள் யாவை? அவற்றை விலக்கி - முன்னேற்றுவது எப்படி? என்ற இவைகளையே மனதில் கொண்டு கல்வித் திட்டம் வகுக்க வேண்டும்.

நாட்டு மக்களுக்கு - அடிப்படைக்கல்வி தேவை. எனவே சிறுவர்களுக்கு நாடுமுழுவதும் கட்டாயக்கல்வி அளிக்கப்பட வேண்டும். ஏழைப் பிள்ளைகளும் கல்வி பெறுவதற்கு ஏற்றவசதி வேண்டும். கட்டாயக் கல்வி பெற்ற பின்னரும் படிக்கக் கூடிய ஏழைப் பிள்ளைகள் இலவசமாக மட்டுமன்றி - அரசாங்கத்தின் ஆதரவினால் எந்த அளவு வேண்டுமானாலும் மேலே படிப்பதற்கு வழிகாண வேண்டும்.

நம் நாட்டிலோ நூற்றுக்கு எண்பத்து எட்டுபேர் கையெழுத்தும் போடத் தெரியாதவர்கள். ஓரளவு கல்வியறிவுடையவர் என்று கருதப்படக் கூடியவர்கள் நூற்றுக்கு மூவரே யாவர். இந்நிலையில் நாட்டில் கல்வி வளரக் கல்விபயிலும் கால அளவைக் குறைப்பதொன்றே நலன் பயக்கும். காலச்செலவும், பொருட் செலவும் குறைவாகவும், அறிவு வளர்ச்சிக்கான பயிற்சி அதிகமும் கிடைக்கச் செய்ய வேண்டும். அத்தகைய திட்டம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

தாய் மொழி ஆக்கம் என்ற பெயரால் ஆங்கிலப் பயிற்சியை எந்த அளவிற்குக் குறைக்கலாம், அந்த இடத்தில் இந்துஸ்தானியை எப்படி அமர்த்தலாம் என்பவைதான் திட்டத்

தின் நோக்கமாகத் தெரிகின்றன. இந்நாட்டிற்கு ஒரு பொதுமொழி தேவையல்லவா? எனவே இந்துஸ்தானியைக் கற்பிப்பது அவசியமாகிறது என்று கூறிப் பள்ளிகளுக்குக் கட்டாயமாக்கிவிட்டது அரசாங்கம்.

இது ஒரு நாடு என்று இந்தியாவைக் கூறுவது எப்படிப் பொருந்தும்? ஒரு ஆட்சியில் இருக்கிறது என்பதனாலேயே ஒரு நாடா? ஆயின் ஒரு காலத்தில் ஒரே ஆட்சியில் இருந்த பாக்கிஸ்தான், எப்படி ஒரு தனி நாடாயிற்று? ஒரு தனி நாடு என்பதாலேயே ஒரு தனி உரிமையுண்டு, அதன் அடையாளமே ஒரு தனிமொழி என்றால், பெரிய ஹைதராபாத் முதல் சிறிய புதுக்கோட்டை வரை உள்ள தனி நாடுகளெல்லாம் ஏன் அவ்வுரிமையை இழந்து-இந்திய இணைப்பை ஏற்றுக் கொள்ளச் செய்யப்படுகின்றன? இந்தியா-ஒரு தேசம் என்றால்-தமிழ்நாடு ஆந்திரதேசம் என்று அதன் பகுதிகளுக்குப் பெயரிருப்பானேன்? இந்தியா ஒருநாடு என்று எவ்வளவு காலமாகத்தான் வழங்கப்படுகிறது? எல்லோரும் மனமார ஒப்புக் கொண்டுள்ளனரா? அன்றி-ஒரு நாடு என்பதாலேயே ஒரு பொது மொழி அவசியந்தானா? ஒரு பொது மொழி இன்றி ஆட்சி நடைபெறும் நாடே இல்லையா? அப்படி ஒரு பொது மொழி வேண்டுமானால் அதற்குரிய தகுதிகள் யாவை? நாட்டிலுள்ள பிறமொழிகளைப் பேசுபவர்களைக் காட்டிலும் எண்ணிக்கையில் அதிகமான ஒரு கூட்டத்தார் பேசும் மொழி என்ற ஒன்றே பொதுமொழி யாதற்குப் போதுமா? அப்படியாக்கப்பட இருக்கும் பொது மொழி- உலகத்தோராலேயே போற்றப்படும் ஒருமொழியாக ஏன் இருக்கக் கூடாது? ஆங்கிலம் அந்நியமொழி, எனவே அது பொதுமொழியாகக் கூடாது என்றால், வடநாட்டு மொழியாகிய இந்துஸ்தானி தென்னாட்டவர்க்கு அது அந்நிய மொழியாகாதா? இன்னும் குறிப்பாகத் தமிழர்க்கு அது பகைமொழி என்பது அறியாததா? ஆயிரக்கணக்கான வீரர்கள் சிறைக்கோட்டத்திலே சிதைந்தும் எதிர்த்தனர் இந்தியை என்பதை உலகம் மறந்துவிட்டதா? மற்றும், ஆங்கிலேயர் ஆட்சியில, ஆங்கிலமே முதலில்-நம்மை அடக்கியாளும் கருவியானதுபோல, இப்பொழுது வடவர்-நம்மை அடக்கி ஆள - இந்துஸ்தானி பொது மொழி என்ற பெயரால் படையெடுக்கிறது என்பதைத் திராவிட இனத்தவர் உணர்வில்லை என்ற எண்ணமா? எம்மொழி பொது மொழியானாலும் அது மற்றெம்மொழிக்கும் இழிவேயாம் என்று இத்துணைக்கண்டத்து மொழிவாரி இனமக்கள் ஒருபோதும் எண்ண மாட்டார்களா? இந்துஸ்தானி ஏன் ஐயா பொதுமொழி- தமிழ்தான்

இருக்கட்டுமே, அல்லது இரண்டுந்தான் பொதுமொழி, ஏதேனும் ஒன்றைப் பயின்றாலே போதும் எந்த அரசாங்க அலுவலுக்கும் என்று தான் அரசியலார் தீர்மானிக்கட்டுமே என்று தமிழன் கூறமாட்டானா? இவை முடியாதெனில் - தென்னாட்டாரும் வடநாட்டாரும் பொதுவாக பயின்றுள்ள, பழகியுள்ள பயன்மிக்க ஆங்கிலமே பொதுமொழியாகட்டும் என்றுரைக்க மாட்டாரா தென்னாட்டார்? ஒப்ப மறுத்தால் ஏனய்யா இந்தத் தொல்லை எம் வாழ்வு தனிவாழ்வு - எம்மை ஏன் உம்மோடு பிணைத்து உதவாத இந்துஸ்தானியை, எம் தலையில் சுமத்துகிறீர், எம்மை விடும்-நாம் பிரிகிறோம் என்று அவரவரும் கூறமாட்டாரா? கூறத்தொடங்கினால் தென்னாடு வடநாடு வேறுபாடு வளராதா? அதில் ஆரியர் திராவிடர் போராட்டம் தோன்றாதா? அதன் பயனாகத் திராவிடம் மலராதா? அதுவே இயலாவிடினும் தமிழ் நாடேனும் தனியாட்சி எய்தாதா? தமிழ் நாட்டைக்கூடத் தனித்தாள முடியாத அளவிற்குத் திராவிட உணர்ச்சி கொண்ட தமிழர்கள் வெறும் தொழும்பர்களா? சிங்கத்திறம் படைத்த தங்கத்தமிழரிடம் வால் நீட்டினால் உதைதான் கிடைத்திடும் காண் என்றொருகவிஞர் பாடியுள்ளதையும் மற்ற இன்னோரன்ன பலவற்றைக் குறித்தும் சிந்தித்திருந்தால் இந்துஸ்தானியை ஏன் பொது மொழியாக்கப் போகிறார்கள்?

இவைகளைச் சிந்திக்கவில்லை என்பதுமட்டுமல்ல - அவர்கள் சிந்தனையே - இந்துஸ்தானியை எப்படி - ஆளும்மொழியாக்குவது என்ற ஆழ்ந்த சிந்தனையிலேயே ஈடுபட்டிருந்ததெனில்- பக்கத்திலுள்ளவர்கள் எழுப்பும் ஓசையாயினும் எப்படிக் காதிலேறும்?

எனவே, இந்துஸ்தானியைப் பொதுமொழியாக்கி அதன் ஆதிக்கத்தை வளர்க்க- ஆங்கிலத்தை-ஆங்கிலேயர் ஆட்சி ஒழிந்த பின்னும் - ஒதுக்குவதிலே உற்சாகம் காட்டப்படுகிறது. திடீரென்று இந்துஸ்தானியைப் புகுத்தினால் - மக்கள் விழிப்புணர்ச்சி கொண்டால் என்னவாகும் என்று கருதியே சிறிது சிறிதாக ஆங்கிலத்தை விலக்கி அவ்விடத்தில் இந்துஸ்தானியை நுழைக்கத் திட்டமிடுகின்றனர்.

ஆங்கிலத்தைப் பயிற்றுவித்தும் அதுபயனிலாமற்போகும் நிலையைத் தோற்றுவித்து, ஆங்கிலத்தின் பயனறியாத மக்களிடம் இந்துஸ்தானி செல்வாக்கு தேடும்.

இப்பொழுதே இந்துஸ்தானி, நம்நாட்டில்உள்ள எல்லா இடைநிலை உயர்நிலைப் பள்ளிகளிலும், முதல் படிவமுதல்

ஆறும் படிவம் வரை(I Form to - VI Form) வாரத்தில் இரண்டு மணி நேரம் பயிற்றுவிக்கப்படுமாம். மூன்றுவது மொழியோ முதல் படிவத்திலிருந்தே தொடங்குகிறது, இரண்டாவது மொழியாகிய ஆங்கிலமோ-இரண்டாம் படிவத்திலிருந்து தான்(IIபாரம்)தொடங்கப்பெற இருக்கிறதாம். இம்முறை-ஆங்கிலத்தைப் பயிலும் போது பள்ளிப் பிள்ளைகளுக்குச் சிரமமாகத் தோன்றலாம். எனவே, ஆங்கிலத்தின் அவசியத்தை உணர்ந்தவர்களாக இருப்பின், இரண்டாவது மொழிபயிற்றுவிக்கப்பட்டு, ஓரிரண்டு ஆண்டுகள் கழிந்த பின்னர் தான் மூன்றுவது மொழியைப் பயிற்றுவிக்கத்தக்க வகையில் திட்டமிட வேண்டும். முதல் படிவத்தில் ஆங்கிலம் தொடங்கப்பட வேண்டும். மூன்றும் படிவத்தில் வேண்டுமானுல் மூன்றும் மொழி பயிலத்தொடங்கலாம். அதற்கு முன்னரே மூன்றுவது மொழி பயிலச் செய்வது அவசியமென்று கருதினுல் அதற்கு ஓராண்டுமுன்பே இரண்டாவது மொழியாகிய ஆங்கிலம் கற்பிக்கப்படவேண்டும். குழந்தைகள் சகல மொழிகளைப்பயில்வது கடினம் என்பதாலேயே - ஆங்கிலம் தொடங்கப்படும வகுப்பு மேல் வகுப்பாக மாற்றல் (உயர்த்தப்) படுமானுல் - இந்துஸ்தானியையோ, அன்றிப் பழம் புகழ் மொழியில் ஒன்றினையோ, உருதுவையோ - அதற்கு முன்பே தொடங்குவது எப்படி-நியாயமாகும் ?

மற்றும் ஆங்கிலத்தில் நமது இளைஞர்கள் நல்ல தேர்ச்சி பெறுவது அவசியம் என்பதை உணரும் எவரும்-முதலிலேயே ஆங்கிலம் தொடங்கப்படவேண்டும் என்பதை மறுக்க மாட்டார்கள்.

இங்கிலையில் - இந்துஸ்தானியின் ஆதிக்கம் நிலைக்க, ஆங்கிலம் முதலிய வேற்று மொழிகளிலே உள்ள கலைச் சொற்களையெல்லாம் இந்துஸ்தானியிலேயே அமைத்து- அதையே மற்ற இந்திய மொழிகள் யாவும் பொதுவாக ஒப்புக்கொள்ளச்செய்யத் திட்டமிட்டிருப்பதாகவும் தெரிகிறது.

அவர்கள் திட்டம் போடுகிறுர்கள் இந்துஸ்தானியைப் பொதுமொழியாக, ஆளும் மொழியாக நிலைநாட்ட. நாமோ அத்திட்டத்திற்குத் - தேசியம் பேசித், தலையசைத்துத் தாளம் போடுகிறேம். தாய்நாட்டுப் பற்றுஎன்று எண்ணிக்கொண்டு, அறிவை அடகுவைத்து விட்டு, பழைய வரலாற்றை மறந்துவிட்டு, ஆங்கிலத்தின் இடத்தை ஒழித்து இந்துஸ்தானிக்கு அளிக்கிறேம்.

பொதுமக்களுக்குஉரிமையான ஒருநாட்டின் ஆட்சிப்பீடத்தை, பகை அரசர் இருவர் போரிட்டு, ஒருவர் பற்றிக்கொள்ளும் நிலையில் வெற்றி பெற்ற அரசனு

டைய புரோகிதன், தனக்குப் பட்டஞ்சூட்டச் சொல்லிக் கேட்பது போன்ற ஒரு கேலிக் கூத்தை இந்நாட்டு ஆரியம் கைக் கொண்டுள்ளது. அதன் திட்டப் படி சமஸ்கிருதமே பொது மொழியாக்கப்படவேண்டுமாம். பலமொழிகளிலும் கலந்திருப்ப தால்-பலமொழியினரும் அதை ஒப்புக்கொள்வராம். எனவே செத்த வடமொழி, திராவிடத் தைச் சீரழித்தப் பழிமொழி, ஆரியத்தின் சூதுமொழி அரி யணை ஏற வேண்டுமாம். எவ் வளவு துணிச்சல் அந்த இனத் திற்கு! நாம் அவர்களைக் கோ ழைகள் என்கிறோம், அவர்களு டைய துணிச்சலை எண்ணிப் பார்க்கவே நம்மவர்களுக்குத் துணிச்சல் இல்லை. துணிச்சல் இருந்திருந்தால், யாரேனும் ஒரு தமிழர், தமிழர் தலைவர்க ளிலே ஒருவர், அன்றொருநாள் இமயத்தில் தமிழ்க்கொடி பொ றித்த வரலாற்றைப் புரட்டிக் காட்டி, அதற்கும் முன்னால் வட நாட்டில் திராவிட மொழிகளே பேசப் பட்டதை நினைப்பூட்டி, திராவிட மொழி அமைப்பு முறையைப் பயின்றே வட மொழி செப்பனிடப் பட்டு சமஸ்கிருதமாயிற்று என்பதை எடுத்துச் காட்டி, நேற்றும், வட நாட்டில் உள்ள கோண்டுக்கள், தங்கள் திராவிட இனத்தவர்- எனவே இந்துக்களுமல்ல, ஆரி யருமல்ல என்று கூறி இருப்ப தைச் சுட்டிக்காட்டி, 'உல காண்டதமிழ்' என்றபெயருள்ள எந்தமிழ் இத்துணைக் கண்ட முழுதும் ஆண்டதில் ஐயமில்லை என்பதை எடுத்துரைத்து, 'இம யங்கண்ட எந்தமிழ் ஏனப்பா இந்நாட்டுப் பொதுமொழி யாகக் கூடாது' என்று கேட்டி ருக்க மாட்டாரா? இந்துஸ் தானி ஏன்? உலகம் போற்றும் உத்தமர் காந்தியாரே ஒரு முறை கூறினாரே தமிழை வட நாட்டினரும் பயில வேண்டும் என்று அப்படிப்பட்ட சிறப்புக் குரிய தமிழ் இந்து முஸ்லீம் ஒற்றுமையை இன்றும் காப் பாற்றி வருகின்ற பெருமைக்கு ரிய மாத்தமிழ் இந்தியாவின் பொது மொழியாக வேண்டும் என்று ஏன், எவரும் கூற முன் வரவில்லை? செத்த வடமொழிக் குச் சிம்மாதனம் தேடுகிறார் களே, அவர்களின் துணிச்சலும் கட்டுப்பாடும் மட்டும் நம்மிடம் இருந்தால்......தமிழ் இத்தர ணியாளத் தவறி இருக்காது. இன்னிலையில் சமஸ்கிருதம், இந்துஸ்தானியுமே ஆதிக்க வெறி கொண்டு அலைகின்றன என்ற போதிலும் (அவைகளுக் கிடையில் உண்மையில் போட்டி யில்லை.) சமஸ்கிருதம் ஏற்கன வே வெற்றி பெற்ற மொழி இந்துஸ்தானி இன்று வெற்றி பெறும் மொழி. அன்றும் தமிழ் சீரழிந்தது. இன்றும் அந்நிலை ஏற்படாது என்பதற்கு ஆதாரம் இல்லை. ஆரியத்துக் கோ எம்மொழி ஆதிக்கம் செலுத்தினும் வெற்றியே.

தமிழ் மட்டும் ஆட்சிபுரியக் கூடாது.

இது தவறானால், இது காறும் தமிழ் நாட்டுப் பார்ப்பனரில் ஆச்சாரியாரிலிருந்து வரதாச்சாரி வரையில் எவரேனும் ஒருவர் - தமிழினது பெருமையை எடுத்துக் கூறி, குறளினது சிறப்பை விளக்கிப் பேசி-தமிழ்தான் இந்தியாவின் பொதுமொழியாகும் தகுதியுடையது, என்று ஒரு முறையேனும் கூறி, யிருக்கலாமல்லவா? அவர்களுக்கு எப்படி அந்தப் பெருங்குணம் நல்லெண்ணம் வரும்? சமஸ்கிருதமன்றோ--செத்து சுண்ணாம்பானாலும்-- அவர்களது தாய் மொழி.

இனி ஆங்கிலத்தின் அளவு இந்துஸ்தானி பயனளிக்காது என்பது மட்டுமல்ல. ஆங்கிலத்தோடு ஒப்பிடுவதற்கே தகுதியற்றது, இரண்டும், அதிகக் கலப்படைந்து வளர்ந்த மொழிகள் என்பதைத் தவிர்த்து. ஆங்கிலத்தை நீக்கிவிட்டால் அதனால் ஏற்படும் குறையை இந்துஸ்தானி ஒரு போதும் நீக்க முடியாது.

அப்படிப்பட்ட நிலை ஏற்படுமானால், அதைவிடப் பல மடங்கு அழகாகவும், நன்றாகவும் 'தமிழ்' அக்குறையைப் போக்கக் கூடும்.

மேலும் தமிழினது வளர்ச்சிக்கும் ஆங்கில மொழி அறிவே மிகவும் பயன் படக்கூடும். தமிழ்மொழி இயல் ஆராய்ச்சி, வடிவியல் ஆராய்ச்சி, ஆகிய வற்றுக்கும், இன்றியமையாத பெருஞ் சீர்திருத்தங்களுக்கும் ஆங்கிலமொழி ஆராய்ச்சி அறிவே துணையாக முடியும். தமிழிலே மலர வேண்டிய பல புதுமைக் கலைகளையும் ஆங்கிலத்தின் வழியாகவே கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இனி, மண்டலமொழிகளிலே தமிழிலே கையாளப்படும் கலைச் சொற்களும், ஏற்கனவே மலர்ந்துள்ள கலைச் சொற்களைத் தவிர்த்துப் பிறவெல்லாம், ஆங்கிலத்திலே வழங்கப்படும் உலகப் பொதுக் கலைச்சொற்களாகவே இருப்பதுதான் பயன் மிகுந்தது என்று காணப்பட்டுள்ள முடிவின்படியும், தமிழ் ஆங்கிலத் தொடர்பைக் கொண்டுதான் தன் வளம் பெருக்கிக் கொள்ளவேண்டியதாக இருக்கிறது.

விஞ்ஞான உலகத் தொடர்பே—தமிழ் மொழியைப் பொறுத்த வரையில்—ஆங்கில ஏடுகளினின்றும் மொழி பெயர்த்தே வளரவேண்டியதாகவும், ஆராய்ச்சிக்கு ஆங்கில அறிவு இன்றியமையாததாகவும் ஆகிவிட்டது.

எனவேதான் இந்துஸ்தானி இடம் தேடி வாய் பிளந்தலையும் இவ்வேளையில், ஆங்கிலப் பயிற்சியின் முக்கியத்துவத்தையும் தகுதியையும் குறைக்கத் திட்டமிடுவது நமக்கு நாமே தீமை செய்துகொள்வதாகும். ஆங்கி

லத்தைப் பயிலும் மாணவர்கள் உயர்நிலைப் பள்ளியின் இறுதி வகுப்பினின்று வெளிவரும் நிலையிலேனும் ஆங்கிலத்தில் வெளிவரும் எந்த ஏட்டையும் படிக்கும் ஆற்றல் பெறும்படித் திட்டம் வகுப்பதுதான் அறிவு வளர்ச்சிக்கும் தமிழ் வளர்ச்சிக்கும் பயன்படக்கூடும்.

ஆங்கிலத்தைக் கைவிடுவது தாய்மொழிப் பற்றின் விளைவு என்று கருதுவதும் தவறு. இந்துஸ்தானியைப் பொதுமொழியென ஏற்பது தமிழர்க்கும், அவர் தம் கலை, மொழி, நாகரிகப் பண்பாட்டிற்கும் இழுக்கேயாகும். இந்துஸ்தானியின் ஆதிக்கம் - சமஸ்கிருதத்தின் ஆதிக்கமாகத்தான் இருக்கும் என்பதோடு, வடவர் ஆள, வடவர் வாழ, வடவர்மொழி ஓங்க, தமிழர் வீழ, தமிழ்மொழி தாழ என்ற இரங்கத்தக்க நிலைதான் ஏற்படும். இவ்வித நிலைக்கு ஆளாகக் கூடாதெனில், இந்நாட்டுத் தமிழர் எல்லோரும் கூடியே, இந் - துஸ் - தானிக்கு இங்கென்ன வேலை? இந்நாட்டுத் தமிழர்க்கு ஏன் இந்தச் 'சனியன்', என்றுமுழக்கிட வேண்டும் முழக்கத்தொடங்கினால், வெற்றியைப் பற்றிய ஐயம் தமிழர்க்கு இல்லை. வெல்க தமிழ்மொழி!— வீழ்க ஆதிக்க மொழிகள் !!

★ கால தாமதம்! ★

புது வாழ்வின் இவ்விதழ் தவிர்க்க முடியாத சில காரணங்களால் கால தாமதமாக வெளி வருகிறது. அடுத்த மாதம் முதல், 15-ம் தேதி அன்றே எல்லா ஊர்களிலும் கிடைக்கும்படியான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம்.

" நிர்வாகி "

தொடர் கதை :

வானளாவும் மரங்கள் அடர்ந்து வளர்ந்த சோலையிலே தழைத்த மாவினது இளந்தளிர் மேனியாளுக்கேற்ற பெயர், பொற்சிலை! மலர்ந்த குவளை மலரைக் கண்ணாகவும், தாமரையை முகமாகவும், கருமுகிலைக் கூந்தலாகவும், ரோஜா மலரை உடலாகவும் கொண்ட அந்த அழகிய பூங்கொடியாளின் பெயர் பொற்சிலை! ஆஹா! இனிமை, இனிமை! பொன்னவிர் மேனி! பொற்சிலை பெயர்! மிக மிகப் பொருத்தம்.

பொற்சிலை என்று என் மனதிற்குள்ளாகவே மெதுவாகக் கூறிக்கொண்டேன். இனிமையான அப்பெயரை உச்சரிக்க உச்சரிக்க என் உள்ளத்தில் உவகை பொங்கியது.

"என்ன யோசிக்கிறீர்கள்?" என்று கனிமொழியில் இசைக் குரலில் கேட்டாள் அவள்.

"உனக்கு இப்பெயர் சூட்டியது யாரென்றுதான் யோசிக்கிறேன்!"

"ஏன், பொருத்தமில்லையா?"

"குருடனைத் தவிர மற்றவர் பொருத்தமில்லை என்று சொல்லாரே!"

"அப்படியா?"

"ஆமாம்! உன் எழில் உடலுக்கேற்ற இவ்வழகிய பெயரை இட்டவர் யாரென்று நான் ...."

"என் தாத்தா!"

"உன் தாத்தாவின் உள்ளம் கலையுள்ளமாகத் தானிருக்க வேண்டும்...... அவர் பெயரென்ன?......"

"தாத்தா!"

"அதுதான் கூறிவிட்டாயே! அவர் பெயரென்ன?"

"உண்மையாகவே எனக்குத் தெரியாது!"

"உன் தகப்பனாரின் பெயர்?"

அழகிய மலரை எடுத்து அனலில் போட்டால், வாடிக் கருகுவதைப் போல், அவள் மலர் முகம் சோகத்தால் வாடிச் சுருங்கியது! கன்னியின் கண்களில் நீர் நிறைந்தது.

"பொற்சிலை! என்ன இது? ஏன் அழுகிறாய்?" என்று கூறிக்

கொண்டே அவள் அருகில் சென்றேன்.

"அப்பா அம்மா யாரும் எனக்குக் கிடையாது!" என்று கூறித் தேம்பித் தேம்பி அழு தாள்.

"யாருமே இல்லையா?" என்று சொல்லிக் கொண்டே, பெருமூச்சு விட்டேன். அவள் துன்பப் படும்படியாக அக்கேள் வியை ஏன் கேட்டோம் என்று நானே நொந்து கொண்டேன். அவள் படும் வேதனையைக் காணக் காண என் நெஞ்சம் கவ லையில் மூழ்கியது.

"அவர்கள் என்ன ஆனார் கள்?" பதட்டத்தால் இப்படி வேறொரு கேள்வியைத் திடீ ரென்று கேட்டு விட்டேன்.

பொற்சிலை சோர்ந்து புற்றரை யில் அமர்ந்தாள். நானும் அவள் அருகில் உட்கார்ந்தேன். நீர்கசியும் நீண்ட கண்களால் என்னைப் பார்த்தாள். தலையை அசைத்து மெல்லிய குரலில், "என் தாய் கொல்லப்பட்டாள்! என் தந்தை தற்கொலை செய்து கொண்டார்!" என்று கூறி, செவ்விய தன் கரங்களால் கண் களை மூடிக்கொண்டு அழுதாள்.

"யாரால், எதற்காக உன் தாய் கொல்லப்பட்டாள்? உன் தந்தையின் தற்கொலைக்குக் காரணமென்ன?" என்று முழு விபரத்தையும் அறிய மேலும் கேள்விகள் போட என் மனம் தூண்டியது. மற்றொரு சமயம் அந்த வரலாற்றை அறிந்து கொள்ளலாம், இப்பொழுது இவளை மேலும் துன்புறுத்தக் கூடாதென்று நினைத்துப் பேசா மல் இருந்து விட்டேன். சிறிது நேரம் இருவரும் மௌனமாக இருந்தோம்.

செந்நிற கதிர்களை வீசிக் கொண்டே சூரியன் அடிவானத் தில் மூழ்கிக் கொண்டிருந்தான்.

"இப்பொழுது நீங்கள் எங்கு போகப் போகிறீர்?" என்று தன் கண்களைத் துடைத் துக் கொண்டே கேட்டாள். அவள் குரலில் முன்போல் அவ் வளவு துக்கம் கலந்திருக்க வில்லை.

"நீ போக நேரமாகிறதா?"

"ஆமாம்! தாத்தா கோபித் துக் கொள்வார்......"

"உன் தாத்தாவைப் பார்க்க வேண்டும், அவரிடம் பேச வேண்டும் என்று ஏனோ எனக்கு ஆசை அதிகமாகி விட்டது! பொற்சிலை, நானும் உன்னுடன் வரலாமா?"

"அது முடியாது!"

"ஏன்?"

"அவர் யாரையும் பார்க்க விரும்ப மாட்டார்! தமிழர் களைக் கண்டாலே அவருக்குக் கோபம் பொங்கிக் கொண்டு வரும்!"

"தமிழன் தமிழனைக் கண்டு கோபிக்கலாமா? இதுதான் தமிழ்ப் பண்பா?"

"இந்தக் கேள்வியை என் தாத்தாவிடம் கேளுங்கள், சுடச் சுட பதில் தருவார்!"

"இப்படிப்பட்ட கேள்விகளைக்கேட்கத்தானே, அந்தப் புதுமை மனிதரை நான் பார்க்க வேண்டுமென்று விரும்புவது!"

பொற்சிலை புன்னகை செய்தாள். எனினும் தன்னுடன் அழைத்துச் செல்வது முடியாத காரியமென்று அவள் மறுத்தாள். நானா விடுபவன்? விடவில்லை! திடீரென்று காற்று வீச, அவள் மேலாடை என் மார்பில் விளையாடியது. என்னிடம் வந்து விளையாடிய அவள் பொன்னுடலின் காவல் தோழியைப் பற்றினேன்!

"என்ன இது?" என்றாள் கோபம் கொண்டவளைப் போல. "ஆடை மெல்லியது போலிருக்கிறதே!" என்று கூறி ஆடையைத் தடவிப் பார்த்தேன்!

மேலாடையை இழுத்தாள்! அவளைவிட எனக்குத்தானே வலிமை அதிகம்? எழுந்தாள்! அப்பொழுதும் நான் விடவில்லை. பிறகு நாணி உட்கார்ந்தாள்!

"இது நல்லதல்ல!" என்றாள்.

"இதைவிட நல்லதும் உள்ளதோ?" என்றேன்.

"உள்ளது" என்றாள்.

"சொல்" என்றேன்.

"சொல்ல எனக்குத் தெரியாது!"

"செய்துதான் காட்டேன்!"

பொற்சிலையின் வேல்விழிகள் என் இதயத்தைத் துளைத்தன! என் உடல் அவள் உடலை நெருங்கிற்று. முதலில் பயந்தாள் பிறகோ துவண்டாள்!...
......

பொற்சிலையே பூக்காடு! அவள் தந்த இன்பம் பூந்தேன்! அதை அருந்தி அகமகிழும் தும்பியானேன் நான்!

"நாளையும் இங்கு வருகிறீர்களா?" என்று தூக்கத்திலிருந்து எழுந்தவளைப்போல ஒருவித குரலில் கேட்டாள்.

"முடியாது, பொற்சிலை!"

"ஏன்? இன்றோடே என்னை மறந்து விடுவீர்களா?" என்று சோகமான குரலில் பேசினாள்.

"இன்று உன்னை விட்டு நான் பிரிந்தால்தானே, நாளை வருவதற்கு" என்று கூறி அவள் கன்னத்தைக் கிள்ளினேன். கலகல வெனச் சிரித்தாள்.

"கண்ணே! அவரை நான் பார்க்க வேண்டுமே!"

"அத்தான்!...இப்படி நான் அழைக்கலாமா?" என்று வெட்கத்தோடு வினவினாள்.

"உரிமைதான் முத்திரை இடப்பட்டு விட்டதே! இனி நான் அத்தான்தானே? நீ?"

"ஆமாம்!" என்று கூறிக்கொண்டே தோளோடு தோள் மாறுபடத் தழுவினாள்.

"நான் சொல்வதைப் போல் செய்தால், என் தாத்தாவைத்

தாங்கள் காணலாம்! காண்பது மட்டுமல்ல அவர் அன்பையும் பெறலாம்!''

"அப்படியே செய்கிறேன், சொல், கண்ணே''

அவள், தன் யோசனையை என் காதுகளில் இரகசியமாகக் கூறினாள். எனக்கும் அது, சரி யென்றே பட்டது.

புற்றரையில் பூவை படுத்தாள் என்னிருகைகளாலும் அவளைத் தூக்கிக் கொண்டேன்

"வழி எது?'' என்றேன்.

"இப்படியே போங்கள்'' என்றாள். அவள் காட்டிய வழியே சென்றேன்.

நல்லோசை செய்து கொண்டே பறவைகள் தம்தம் கூடு நோக்கி விரைந்து பறந்தன. அவள் முழுஉடலையும் மிக எளிதாக தூக்கி நடந்தேன்! தெவிட்டாத இன்பக் கனவுகள் என் மனதில் தோன்றின! இளமை, அவள் உடலின்மீது அழகோடு கவர்ச்சியையும் வாரி இறைத்திருந்தது. அவள் மேனியின் இளமையின் துடிதுடிப்போடு பெண்மை நர்த்தனம் செய்து கொண்டிருந்தது.

வீசிக் கொண்டிருந்தது வாடைக் காற்று. என் இதயத்தில் இன்பத்தை ஏற்றிய அவள் உடல், என் கைகளுக்குச் சிறிதும் சுமையாகத் தோன்றவில்லை! "இதைவிட இன்பம் உலகில் வேறு இருக்கிறதா?'' என்று என் நெஞ்சையே கேட்டேன்.

"தமிழ் இல்லையோ?'' என்று கிண்டல் செய்தது என் நெஞ்சம். என் கால்களோ நடந்து கொண்டே இருந்தன.

புதர்களுள் புகுந்து நடந்தேன். காற்றைக் கடந்து சென்றேன். வெண் மணற் பரப்பைத் தாண்டினேன். மலை படிவாரத்தை அடைந்தேன்.

ஒரு குகையைக் காட்டி இதனுள் செல்லுங்கள் என்றாள். அதன் வாயிலில் முல்லைக் கொடிகள் தென்றலோடு அசைந்தாடிக்கொண்டிருந்தன. குகையினுள் புகுந்தேன். அது முழுதும் ஒரே மையிருட்டாய் இருந்தது. அச்சத்தோடு அடிமேல் அடிவைத்து நடந்தேன். சிறிது தூரம் சென்றதும் ஒளி தெரிந்தது.

"ஒளி தெரிகிறதே, அங்கு தான் என் தாத்தா இருக்கிறார் ......நன்றாக நான் சொல்லிய படி நடிக்கவேண்டும்! தெரிகிறதா?''

"தெரிகிறது!'' என்று கூறினேன். நடித்தே பழகிக்கொள்ளாத நான், எப்படி நடிப்பது? அதிலும் கற்றறிந்த ஒரு பெரியார் நம்பும்படி நடிக்கவேண்டும் என்பதை எண்ணியதும், சிறிது பயம் தோன்றியது

"தமிழுக்கும் பொற்சிலைக்கும் எதனையும் செய்யத் தயார் தயார் என்றது என் மன வலிமை!''

நடந்து சென்றேன். அழகிய ஓர் ஓவிய இல்லம். அதன்

மத்தியில் ஒரு வெண் தாடிக் கிழவர் உட்கார்ந்து கொண்டு பழைய ஓலைச்சுவடிகளைப் புரட்டிக்கொண்டிருந்தார். காலடி ஓசையைக் கேட்டதும் திரும்பிப் பார்த்தார்!

"யாரது? நில்!" என்று உரக்கக் கூறினார்.

நான் தயங்கி நின்றேன். என் மார்பைப் பொற்சிலை மெதுவாகத் தொட்டாள். பயப்படாதே என்பது அதன் பொருள் போலும்.

கிழவர் என் அருகில் வந்தார். பொற்சிலையைக் கண்டதும் ஆச்சரியத்தாலும் அச்சத்தாலும் அவர் கண்கள் விரிந்தன.

வேகமாக பொற்சிலையை அவர் கைகளில் வாங்கிக்கொண்டார். ஒரு அறையை நோக்கி விரைந்து நடந்தார். நானும் பின் தொடர்ந்தேன். அறையில் ஒரு படுக்கையில் என் இன்பக் களஞ்சியத்தைப் படுக்க வைத்தார்.

முகத்தில் தோன்றிய வியர்வையைத் துடைத்துக்கொண்டு, "என்ன நடந்தது தம்பி?" என்றார்.

"காட்டில் நான் மூலிகைகள் பறித்துக் கொண்டிருந்தேன். திடீரென்று ஒரு பெண்ணின் அபயக் குரலைக் கேட்டுத் திடுக்கிட்டு, அத்திக்கு நோக்கி வேகமாக ஓடினேன்! இவள் ஓடிக் கொண்டிருந்தாள்! ஒரு சிறு கரடி இவளைத் துரத்திக் கொண்டு வந்தது! கரடியின் மேல் நான் பாய்ந்தேன். கரடி தப்பியோடி விட்டது. இவள் மயக்கமுற்றுக் கீழே சாய்ந்து விட்டாள்!

"அப்படியா? இந்த இடம் உனக்கு எப்படித் தெரிந்தது?"

"தேடித்தேடி அலைந்து கடைசியில் கண்டுபிடித்தேன். இவள் யார்? தங்களைச் சேர்ந்தவள் தானா?"

"ஆமாம்! என் மகள் பெற்ற மகளப்பா இவள்!" என்று கூறி, நன்றி நிறைந்த கண்களோடு என்னைப் பார்த்தார்.

"நேரமாகிறது நான் வருகிறேன்!" என்றேன். "சரி சென்றுவா தம்பி" என்று எங்குச் சுருக்கமாகக் கூறிவிடுகிறாரோ என்று நான் பயந்தேன். ஆனால் என்னைப் போக விட அவர் மறுத்துவிட்டார்.

"இரவு இங்கு இரு தம்பி! வேண்டுமானால் நாளைக்குப் போகலாம்!" என்றார். விவரிக்க முடியாத மகிழ்ச்சியினால் என் உள்ளம் கூத்தாடியது.

பொற்சிலையின் அருகில் நாங்களிருவரும் சென்றோம். தண்ணீர் கொண்டுவந்து அவள் முகத்தில் தெளித்தார். களைப்பு நீங்கியவளைப் போல மெதுவாகக் கண்களைத் திறந்து பார்த்தாள்.

"ஐயோ! கரடி!" என்று உரக்கக் கத்தினாள்! வந்த சிரிப்பைச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டேன்.

"பொற்சிலை! பயப்படாதே" என்று கிழவர் அவளைச் சாந்தப்படுத்தினார். பொற்சிலை மிரள மிரளப் பார்த்தாள்!

"எப்படியம்மா உடம்பு இருக்கிறது"? என்று கிழவர் அன்போடு அவளைக் கேட்டார்.

"ஒன்றுமில்லை தாத்தா!" என்று மெதுவாகப் பதிலளித்தாள். அவரது வாடிய முகத்தில் சிறிது மகிழ்ச்சி தோன்றியது. அன்போடும் நன்றியோடும் என்னைப் பார்த்துத் தலை அசைத்தார்.

"இவர் யார் தாத்தா?" என்று ஒன்றுமே தெரியாதவளைப் போலக் கேட்டாள் பொற்சிலை.

"இவர் தாம் அம்மா, உன்னைக் கரடியிடமிருந்து காப்பாற்றியவர்!" என்று கிழவர் என்னை அறிமுகப்படுத்தினார்

என்னைப் பார்த்து "வணக்கம்" என்றாள். நானும் வணக்கம் கூறினேன்.

பொற்சிலை எழுந்து உட்கார முயன்றாள், "வேண்டாம், உடம்பு அதிர்ச்சி யடைந்திருக்கிறது!" என்று நான் கூறினேன்.

"ஆமாம், அம்மா! படுத்துக் கொள்!" என்று கிழவர் என் பேச்சை ஆதரித்தார் அவள் படுத்துக் கொண்டாள்.

"வா தம்பி அடுத்த அறைக்குச்செல்லலாம்!" என்று கூறிக் கொண்டே கிழவர் முன் நடந்தார். நான் பின் தொடர்ந்தேன். திரும்பி அவளைப் பார்த்தேன். வாயைக் கைகளால் மூடிக்கொண்டு சிரித்தாள். நாங்களிருவரும் வெற்றிகரமாக நடித்துக் கிழவரை ஏமாற்றி விட்டோம்!

கிழவரும்நானும் ஓர் அறையினுள் நுழைந்தோம். அறையில் குளிர்ந்த காற்று வீசிக்கொண்டிருந்தது. அங்கு எரிந்து கொண்டிருந்த விளக்கின் சுடர் காற்றினால் மெள்ள அசைந்து கொடுத்தது.

அறையில் பழைய ஓலைச்சுவடிகள் கட்டு கட்டாக வைக்கப்பட்டிருந்தன. அச்சுப் புத்தகங்களும் புதுப்புது பத்திரிக்கைகளும் அங்கு காணப்பட்டன.

மக்கள் வாழும் இடத்தோடு தொடர்பே வைத்துக் கொள்ளாத அந்தக் காட்டு இல்லத்தில் புதியதாக வெளியிடப்பட்ட நூல்களும் பத்திரிக்கைகளும் இருக்கக் கண்டு வியந்தேன். அந்த அறை முழுவதும் சித்திர வேலைப்பாடுகள் நிறைந்திருந்தன.

"தம்பி!" என்று கிழவர் அழைத்ததும் திரும்பிப் பார்த்தேன்.

"உட்கார்!" என்று கூறி சந்தனக் கட்டையினால் செய்த ஓர் ஆசனத்தைக் காட்டினார். இருவரும் உட்கார்ந்தோம்.

அவர் என்னை, எப்படி யெப்படி என்னென்ன கேள்விகள் கேட்கக் கூடுமென்று சிந்தித்து நான் பதில் தயார் செய்து

வைத்துக் கொண்டிருந்த ஒரு கேள்வியையும் அவர் கேட்கவில்லை! என் முகத்தை அப்பெரியார் அடிக்கடி உற்றுப் பார்த்தார்.

"இளங்கோவன் தெரியுமா?" என்றார்.

"தெரியும்!" என்றேன்.

"கம்பன் தெரியுமா?"

"தெரியும்!"

இந்த இரண்டே கேள்விகளைக் கேட்டு விட்டு, "நீ சுயமரியாதைக்காரன் அல்லவா?" என்று புன்னகையோடு வினவினார்.

எனக்கு ஓரே வியப்பாகயிருந்தது.

"எப்படித் தெரிந்து கொண்டீர்?" என்று ஆச்சரியம் கலந்த குரலில் கேட்டேன்.

"இரண்டிற்கும் 'தெரியும்' தெரியும்' என்றுதான் பதிலளித்தாய் அல்லவா? ஆனால் ஒரு வார்த்தைக்கு மறு வார்த்தை உணர்ச்சியில் மாறுபட்டிருந்தது. உன் குரலொலியிலிருந்தே நீ யார் என்று தெரிந்து கொண்டேன் இது சாதாரணமானதுதானே தம்பி?" என்றார். நான் பேசாமல் அவரையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

கிழவர் எழுந்திருக்கவே நானும் எழுந்தேன். அறையின் ஒரு மூலைக்குச் சென்றார்.

ஒரு பாத்திரம். அதன் வாய் துணியினால் மூடிக்கட்டப்பட்டிருந்தது. அதனைக் கையில் எடுத்தார்.

"இது என்ன தெரியுமா?" என்றார்.

"தெரியாது!" என்று மெதுவாகக் கூறினேன்.

"இதுதான் கம்ப ராமாயணம்" என்றார் ஏளனச் சிரிப்போடு.

அவர் சொன்னது எனக்குச் சிறிதும் புரியவில்லை. பாத்திரத்தின் வாயில் கட்டப்பட்டிருந்த துணியை அவிழ்த்து, அதனுள்ளிருந்து ஒரு பிடி சாம்பலை வெளியில் எடுத்தார். என் கண்கள் வியப்பால் விரிந்தன.

"சாம்பலாக்கி விட்டேன், கம்பனை" என்றார் பொருள் நிறைந்த சிரிப்போடு!

மூடப்பட்ட வேறு பாத்திரங்களும் அங்கு காணப்பட்டன. காலிப் பாத்திரங்களுமிருந்தன.

காலிப் பாத்திரங்களை அவர் சுட்டிக்காட்டி, "இனி வரும் ஆபாச நூல்களைப் போட்டு வைப்பதற்காக இவைகளை வைத்துக் கொண்டிருக்கிறேன்" என்று குரல் உயர்த்திக் கூறினார்.

"நாங்களும் இதனைத்தான் நாட்டில் சொல்லிக்கொண்டு வருகிறோம்" என்று சிறிது பெருமையோடு கூறினேன்.

"சொல்வதில் பயனென்ன தம்பி? கம்பனின் சாம்பலைக் கண்டு களித்தாயா?"

நான் மௌனமாக தலை தாழ்த்தி நின்றேன்.

"தம்பி! ஒன்று மட்டும் நினைவில் வைத்துக்கொள். நூறு செய்வேன் செய்வேன் என்று வானமுட்டப் பேசுபவனைவிட, பேசாமல் ஒன்றைச் செய்து காட்டுபவன்தான் சிறந்தவன், உயர்ந்தவன்!" என்று தாடி அசையக் கூறினார்.

"தமிழர்கள் கெட்டுவிட்டார்கள்!" என்று சோகமான குரலில் கூறிக்கொண்டே உட்கார்ந்தார்.

தரையில் பாரதிதாசனின் நூலொன்று இருக்கக் கண்டதும், குனிந்து ஆவலோடு எடுத்தேன். என் செயலைக் கண்ட அக்கிழவர், தாடியைத் தடவிக் கொடுத்தார்.

"இதனைத் தாங்கள் படித்திருக்கிறீர்களா?" என்று அந்நூலைக் காட்டிக் கேட்டேன்.

"படித்திருக்கிறேன்!"

"இதைப்பற்றி தங்களது கருத்தென்ன?"

"பாரதிதாசனின் நூல்கள் நாட்டில் நிலைக்காது! அழிந்துவிடும்!"

"என்ன?"

"ஆமாம் தம்பி! கோபப்படாதே! நிச்சயம் அழிந்துவிடும்" என்றார் அப்பெரியார்.

(தொடரும்)

திராவிடப் பாசறை வெளியிடுகின்றது.

'களஞ்சியம்'

(அரசியல் மாத வெளியீடு)

ஆசிரியர் : டி. எஸ். வாசன்.

1948-ஜூலை 1ல் வெளிவரும்.

தனி இதழ் அணா நான்கு.
ஆண்டு சந்தா ரூபா மூன்று.

எல்லா ஊர்களிலும் முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் தேவை.

விவரங்கட்கு :- 'களஞ்சியம்',
திராவிடப் பாசறை, திருவல்லிக்கேணி, சென்னை-5.

உறுதிப்பாடா? • உடன்பாடா?

அறிஞர். மு. வரதராசன்.

திருமணம் என்பது என்ன? இருவர் கூடி இல்வாழ்க்கை நடத்த உலகம் உடன்படும் அறிக்கை என்பதா? அவர் ஒருவரை ஒருவர் விட்டுப் பிரியேம் என உறுதி கூறும் அறிக்கை என்பதா? மேற் போக்காகக் காண்பார்க்குப் பின்னது தோன்றும். ஆழ்ந்து உணர்வார்க்கு முன்னது தோன்றும்.

அது காதலர் உறுதிப்பாடு எனின், காதலுக்கே இழுக்கும் நேர்கின்றது. உண்மையான காதலர்க்கு உறுதி இயற்கை. காதலுக்கு இயல்பாக இருக்கும் உறுதியை விடச் சிறந்தது ஒன்று இல்லை. அதற்கு உறுதியைத் தரப் பிறிதொன்று இருக்குமாயின் அந்தக் காதல் உறுதி உடையது எனக் கூறுவது வெறுஞ் சொல்லாய் முடியும். மற்றவர்களின் எதிர்ப்புக்கும் பழிப்பிற்கும் அஞ்சாமல் வாழ வல்லது காதல். அதன் உறுதியைக் குறைகூற முடியாது. இருதலைப் புள்போல் ஓர் உயிராய் இயைந்த காதலரை எதுவும் பிரிக்க முடியாது; நெருப்பினும் கொடிய வறுமையும் அவர்களுடைய உறுதியைக் கெடுத்திட முடியாது. பிரிபவர் எல்லோரும் காதலர் அல்லாதாரே. அவர்களுக்குத் திருமணம் என்னும் சடங்கு ஒருவாறு நன்மை செய்யவல்லது. இயல்பாக உறுதி அற்ற அவர்களுடைய உள்ளத்திற்குத் திருமணம் சிறிது காலம் உறுதி அளித்துக் காக்கும். அதுவும் நெடுங்கால உறுதி அன்று. உலகத்தாரால் கட்டுப்படுத்தப் பெற்று உள்ளன்பு குறைந்தவர்களாய் வாழ்வதே அவர்கள் வாழ்வு. அவர்கள் பலமுறை தாங்கள் செய்து கொண்ட திருமணத்தை வெறுத்தும் நொந்தும் இரங்கியும் எண்ணுதல் உண்டு. அரசியல் சட்டமும் சமூக அமைப்பும் உரிமை அளிக்குமாயின், அவர்கள் திருமணக் கட்டை உடைத்தெறிந்து வெளியேறுகின்றனர். இதனை மேல் நாடுகளில் பரக்கக் காணலாம். கீழ் நாடுகளிலும் சட்டமும் சமூகமும் இடந்தரும் சூழல்களில் காணலாம். இங்கெல்லாம் திருமணம் வல்லமை யிழக்கின்றது, பயன் குன்றியதாகின்றது. சட்டமும் சமூகமும் இடந்தராத சூழல்களில் உள்ளன்பு இல்லாக் குறையால் குடும்பங்கள் தொலையுறுகின்றன; உடம்பாடு இலாதவர் வாழ்க்கை ஆதலின், கணவனும் மனைவியும் உட்பகை கொண்டு வாழ்கின்றனர்; குடங்கருள் பாம்போடு உடனுறைதல் அவர்கள் வாழ்க்கைக்கு உவமையாகக் கூறத்தக்கது. குடும்பத்தை விட்டு வெளியேற உலகம் இடந்தரவில்லை; உள்ளிருந்து வாழ உள்ளம் இடந்தரவில்லை: இடையே பெரும் போராட்டமாய் இல்லறம் நடக்கின்றது. அதனை இல்லற வாழ்வு என்பதா? (இல்—அறம்—வாழ்வு) அறம் இல் வாழ்வு என்பதா? நாகரிகம் புறத் தோற்றத்திலேனும் நிலவும் பகுதி

இது. நாகரிகம் அத்துணையும் இல்லாத பகுதியில், கணவனுக்கு- மனைவிக்கும் உட்பகையே அன்றிப் புறப்பகையும் உள்ளது. தூற்றலும் துன்புறுத்தலுமே அக் குடும்பங்களில் ஒருவர் ஒருவர்க்கு ஆற்றும் தொண்டுகள். ஆதலின், திருமணம் உறுதிப்பாடு தருவது என்னும் கருத்து ஏமாற்றமேயாகும்.

ஆதலின், திருமணம் உலகத்தின் உடன்பாட்டை பெறும் முறை என்பதே பொருந்தும். உரிமை எல்லோர்க்கும் இல்லாத நாட்டில் காதலும் எல்லோர்க்கும் இராது. எல்லோரும் காதலராக இரார். ஆதலின் காதல் போலவே போலிக்காதலும் இடம் பெறும். இது காதல், இது போலிக்காதல் என்று பகுத்தறிய வழியும் இல்லை. ஆதலின், பொய்யும் வழுவும் புகாமல் காத்தற் பொருட்டுச் சான்றோர் சூழ்ந்து கண்ட உடன்பாட்டு முறையே திருமணம் என்பதாகும்.

பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப—
(தொல். பொருள். 145)

என்று பழந்தமிழ் நாட்டில் வாழ்ந்து வாழ்க்கையை ஆராய்ந்த தொல்காப்பியனார் கூறியுள்ளார். இத் திருமணத்தால் பொய்யும் வழுவும் புகாமல் காக்க முடிந்ததோ? அதுதான் இல்லை- திருமணப் போர்வையில் காதலரல்லாதாரும் புகுந்தனர். கணவன் வலியனாயின் மனைவியை அடக்கி வாழ்வான். மனைவி துணிவினளாயின் கணவனை அடக்கி வாழ்வாள். இருவர்க்கும் வன்மையும் துணிவும் இருப்பின், வீடு இடையறாப் போர்க்களமாகும். எவ்வாறோ, புறத்தோற்றத்தில் நலம் தோன்றிற்று; உலகினர் செய்யும் இடையூறு குலைந்தது. இவன் இன்னவள் கணவன், இவள் இன்னவன் மனைவி என்று உலகம் அமைதி பெற்றுக் கிடந்தது. அவ்வளவில் பொதுநலம் விளைந்தது. ஆதலின், திருமணம் என்பது இருவர் வாழ்க்கையை உறுதிப்படுத்தும் முறை என்பது தவறு; இருவர் வாழ்க்கைக்கு உலகம் உடன்படும் முறை என்பதே பொருந்தும்.

புதுவாழ்வு

★

அடுத்த இதழிலிருந்து அதிக பக்கங்களோடும், சுவைமிக்க பல அம்சங்களோடும் மிளிரும்.

—ஆசிரியர்.

[தூக்குமேடை]

ஜான் பிரௌன்

[இளவழகன்]

அமெரிக்க உள்நாட்டுச் சண்டை உச்ச நிலையில் உக்கிரகத்தோடும் உணர்ச்சியோடும் நடந்துகொண்டிருந்த நேரத்தில், வட அமெரிக்காவின் வடபகுதியில் போர்க்கோலம் பூண்ட அமெரிக்க வீரர்கள் அத்தனை பேரும், அணிவகுத்து நின்று "அடிமைத்தளை அறுபடப் போராடிய பிரௌன் தியாகம் உயர்க! வாழ்க!! வெல்க!!!" என முழக்கமிட்டனர். அம்முழக்கம் ஆயிரக்கணக்கான இளங்காளைகளின் இதயக்கதவைத் தட்டியது. விழித்துக் கொண்டனர் வாலிப உள்ளங்கொண்ட காளைகள். படை பெருகிற்று. பல்லாயிரக்கணக்கானவர் படையணியுடையோடு பலி பீடத்தில் ஏறினர். பலிபீடமே ஆட ஆரம்பித்தது. கேட்கவேண்டுமா முடிவினை? அழிந்தது அடிமைத்தளை. ஒழிந்தது ஏகபோக வாழ்வு. தெறித்தோடின, நீக்ரோக்களின் கைகளில் பூட்டப் பட்டிருந்த இருப்புக் காப்புக்கள். அடிமைகள் மனிதர்களாயினர். ஏன்? ஆண்டைகளுங் கூடத் தான்! உழைத்து அலுத்த தியாக பரம்பரையினருக்குப் பிறந்தது புது வாழ்வு.

* * *

1859-ம் ஆண்டு அக்டோபர் 16ம் தேதி ஞாயிற்றுக்கிழமை இரவிலிருந்து 18-ம் தேதி செவ்வாய்க் கிழமை இரவு முடிகிற வரையில், நீக்ரோக்களின் அடிமைத்தளையை உடைத்தெறிய, அவல வாழ்விலிருந்து அவ்வடிமைகளை வெளியேற்ற முயன்ற போது, ஹார்பர்ஸ் பர்ரி என்ற ஊரின் கண் பாய்ந்தோடும் போட்டமாக், ஷெனன்டோ என்ற இரண்டு ஆறுகளிலும் ஆயிரக் கணக்கானவர்களின் குருதி பெருக்கெடுத்தோடியது. அவ்விடுதலைப் போராட்டத்தில் பலியான வீரர்கள் தவிர, உயிர் பிழைத்தவர்களுக்குக் கிடைத்த பரிசுகள்-துப்பாக்கிக் குண்டுகள், தூக்கு மேடைகள். அவ்விடுதலை வீரர்களின் தலைவன்தான் ஜான் பிரௌன். அவன் நீக்ரோக்களின் அவல நிலை கண்டு துடித்து அவர்கள் நல்வாழ்வுக்காகத் தன்னுயிர் துறந்தான். மனவலி கொண்ட அம்மாவீரன் தன் தாயகத்தின் கண்களைத் திறந்தான். அவனுடைய சாவு, அமெரிக்க நாடுகளில் இருந்த அடிமைத்தளைகளுக்குச் சாவுமணி யடித்தது.

* * *

பரந்த நெற்றி, அழகான வெண் தாடி, கொஞ்சம் நீண்ட மூக்கு, எதற்கோ முடிவுகாண வேண்டும் என்ற எண்ணத்தின் நினைவு ரேகைகள் படர்ந்த நெற்றி, இடுப்பினின்றும் நீண்டு தொங்கும் கத்தி, ஒருபக்கம். மற்றொரு பக்கத்தில் கைத் துப்பாக்கி.

இவ்வுருவத்தோடு, பரந்த மார்பும், நிமிர்ந்த தலையும், துள்ளும் பிடரி மயிரும் துடிக்கும் கால்களோடு பறந்து வரும் குதிரை மீது, தம் வீரப் புதல்வர் அறுவர் குதிரைகளில் சூழ்ந்து

வர, மற்றும் துணிவு மிக்க மறவர்கள் புரவிமீது பின்தொடர, அதோ வருகிறாரே, அவர் யார் தெரியுமா?

இக்கேள்வி கேட்கப் படவேண்டிய அவசியமில்லாமலேயே அமெரிக்கா அன்று இருந்தது. அவர் ஏறி வரும் குதிரையின் குளம்படிச் சத்தத்தைக் கேட்ட வுடனேயே எதேச்சாதிகார எஜமானர்களின் உள்ளங்கள் குழம்பின. உடல் நடுக்கமெடுத்தது. 'என்ன ஆகுமோ' என்ற ஏக்கத்தில் அவர்கள் இருந்த இடத்திலேயே மயங்கி வீழ்ந்தனர். ஆயிரக்கணக்கான அடிமைகளின் உழைப்பை உறிஞ்சி வாழும் உலுத்தர் கூட்டம் மயங்கி விழாமல் வேறென்ன செய்யும்? ஒயின் பருகி, அதைவிட சிங்காரிகளின் சிருங்காரசமே பெரிதென வில்வெட் மெத்தையிலே மெத்தென மயங்கிக் கிடக்கும் அவர்களுக்குக் குளம்படிச் சத்தம் வீணையின் நாதமாகவா இருக்கும்? நரம்பிலே ஏறும் நாகப் பாம்பின் விஷம் போன்றிருந்தது; ஏனெனில் அவர்களின் எதேச்சதிகாரத்தை, சுகபோக வாழ்வைச் சுக்கு நூறாக்க அல்லவா குளம்படிச் சத்தம் கேட்கிறது.

ஆனால் மற்றோர் காட்சி! வதைபட்டு வாழ்விழந்த உள்ளங்களிலே மலர்ச்சி! ஓர் புத்துணர்ச்சி! அது புன்முறுவலாகத் தோன்றி மறைகிறது. குளம்படிச சத்தம் உண்மையிலேயே, வீணையின் நாதத்தை விட இனிமையாக இருக்கிறது, அந்ததியாக பரம்பரையினருக்கு! ஏனெனில், அவர்கள் பசி, பசி என்று துடித்து அலறுகிற நேரத்தில், புசி, புசி என்று கொஞ்சமும் தராமல், ருசி ருசி என்று தின்றுக் கொழுத்த கூட்டத்தின் முடிவுக் காலத்தை யல்லவா அறிவிக்கிறது அசசத்தம். அவர்களது அடிமைத்தளை உடைபடப்போகும் பொற்காலத்தை நினைவூட்டுகிறது அக்குளம்படி ஒலி! விடுதலை பெற்று நலமுடன் வாழப்போகும் நற் காலத்தைக் காட்டுகிறது அச்சத்தம்! கனவிலும் கருதா புது வாழ்வு பெறப்போகிற, அந்நற்செய்தியை அறிவிக்கும் அக்குளம்படிச் சத்தம், வாழ்விழந்து அலறித்துடிக்கும் அடிமைகள் மனதில் எழுச்சியைத் தோற்றுவிக்காமல் இருக்கமுடியுமா?

இவ்வாறு மதோன் மத்தர்கள் மனதில், மருட்சியையும், மண்டியிட்டு வாழ்ந்தவர்கள் மனதில் மலர்ச்சியையும் ஒரே நேரத்தில் தோற்றுவிப்பதற்குக் காரணமாயிருந்த மறத்தலைவன்தான், மேலே சித்தரித்துள்ள, ஜான் பிரௌன் (*John Brown*).

1800-ம் ஆண்டு மே மாதம் 9-ம் தேதி பிரௌன் அமெரிக்காவிலுள்ள கான்னிட்டிகட் என்ற கிராமத்தில் பிறந்தார். அவருடைய தந்தை அமெரிக்கப் போர்ப் படையொன்றில் சமையல் வேலை செய்து வந்தார். பிரௌன், இளம் பருவத்தில் போர் வீரர்களுக்கு உணவு பரிமாறும் வேலையில் தன் தந்தைக்கு உதவி புரிந்து வந்தார். ஆரம்பப் பள்ளியில் பயின்றதும் சில ஆண்டுகளே. கற்றுக் கொண்டதோ படிக்க எழுத மாத்திரமே.

காளைப் பருவம் எய்தினார் பிரௌன். கட்டமைந்த அவர் உடலையும் அறிவுக் கூர்மையையும் கண்ட படைத்தலைவன், இவரைப் படையில் சேரும்படிக் கேட்டுக் கொண்டான். "நான் விரும்ப வில்லை" என்றார். "சேர்ந்துத்தான் ஆக வேண்டும்" என மிரட்டினான். "முடியாது" எனத் துணிவுடன் கூறினார். "ஏன் சேரமுடியாது?" இது படைத்தலைவனின் கோபத்தில் உதித்த கேள்வி.

"உரிமைப் போராட்டம் தவிர மற்றைய ஊதாரிப் போராட்டங்களெல்லாம் வெறும் பித்தலாட்டம் என்று நான் நினைப்பதால், படையில் சேர விரும்பவில்லை" எனப் பட்டென பதிலளித்தார். படைத்தலைவன் பக்கத்திலிருந்த சாட்டையைப் பார்த்தான். புரிந்து கொண்டார் பிரௌன். ஆனால் அதற்காகத் தான் உண்மையென எண்ணிக் கூறியதைச் சந்தர்ப்பத்துக்கு ஏற்றாற்போல் மாற்றிக் கொள்ள வில்லை அவர். 'சாட்டை என்ன செய்யமுடியும்? என் எண்ணத்தைக் கூட மாற்றி விடுமா?'' என்று கேட்பது போலப் படைத் தலைவனைப் பார்த்தார். அவன் கோபம் பொங்கியது. சாட்டையால் பிரௌனைத் தன் கை சளைக்கு மட்டும் அடித்தான். ஆனால் அவன் ஆத்திரம் அப்படியும் தீர்ந்தபாடில்லை. சமையல் வேலையை விட்டு நீக்கினான் பிரௌனின் தந்தையையும். வேலையை விட்டு நீங்கிய தந்தையும் தனயனும் பொட்டவாட்டமி என்ற ஊரை, அடைந்து தங்கினர். பிரௌன் நில அளவையர் வேலையில் ஈடுபட்டார். கொஞ்ச நாளில் டையன்திலஸ்க் என்ற பெண்ணை மணந்து கொண்டார். வண்ண நிலவு அவள். இவர் வண்ண நிலவில் மகிழ்ந்து விளையாடும் கடல். ஆனால் வண்ண நிலவு திடீரென்று மறைந்துவிட்டது, ஆறு ஒளிச்சுடர்களை அளித்து விட்டு. பின் பிரௌன் இருமுறை மணம் செய்து கொண்டார். பன்னிரண்டு புதல்வர்களுக்கும் எட்டுப் புதல்விகளுக்கும் தந்தையானார்.

* * *

பிறகு, அமெரிக்கக் குடியேற்ற நாடுகளில் பதினெட்டாம் நூற்றாண்டில் பரவி வாழ்ந்த ஐரோப்பியரால், -வெள்ளையரால்-அவ்வமெரிக்க நாட்டை முழுவதும் சீர்திருத்தி வாழத்தகுந்த இடமாக மாற்ற முடியவில்லை. உழைப்புக்கு ஆள் தேவையாயிற்று.

ஆகவே ஆப்பிரிக்க நாட்டில் புகுந்து, துப்பாக்கியைக் காட்டி நீக்ரோக்களைப் பிடித்து இழுத்து வந்தனர். கத்தி முனை முன் அவர்களை ஆட்டிப் படைத்தனர். நீரோடை நிலங்கிழிக்க நெடுமரங்கள் நிறைந்து பெருங்காடாக்கிக் கொண்டிருந்த பாழ் நிலங்களைத் திருத்திக் கழனி உண்டு பண்ணி, சிற்றூரும் வரப்பெடுத்த வயலும் ஆறு தேக்கிய நல் வாய்க்காலும் வகைப்படுத்தி, அமெரிக்காவைப் பொன் விளையும் நாடாக்கித் தந்தனர், அந்நீக்ரோக்கள். கற் பிளந்து, மலை பிளந்து, கனிகள் வெட்டி, செல்வம் குவித்துத் தந்தனர் அந்த ஆப்பிரிக்க நாட்டவர். புனலிலும் புயலிலும் உழன்று, பாம்பிடமும் பல்வகை விலங்குகளிடமும் போரிட்டு, போக்கு வரவு உண்டாக்கி ஊர்கள் அமைத்து மக்கள் மகிழ்வுறும் நாடாக்கித் தந்தனர் அவ்வடிமைகள். அவர்கள் மாட மாளிகைகள் கூட கோபுரங்கள் கட்டினர். அதிலே வெள்ளையர் வெள்ளாட்டிகளோடு வாழ்ந்தனர். உணவு தானியங்கள் உற்பத்திசெய்தனர் இவ்வடிமைகள். அதை உண்டு கொழுத்தனர் வெள்ளையர். ஆறுகள் வெட்டினர் இக்கறுப்பர். அதிலே வெள்ளையர்தம் சிங்காரிகளோடு படகோட்டினர். இதற்கு அக் கறுப்பர்கள் பெற்ற பரிசுகளும் உண்டு! சாட்டையடிகள், கத்திக் குத்துகள், துப்பாக்கிக் குண்டுகள் இவையே அப்பரிசுகள்.

மிருகத்தினும் கடையராக, மக்களை வேறு நிறத்தவர் என்ற காரணத்திற்காக உடலிலே ஊசிவிட்டு ஆழம் பார்க்கும் அளவுக்கு ஆணவ அதிகாரம், பயங்கர மிருகத்தனம் தலைவிரித்துக் கூத்தாடியது. பானை

யைத் தட்டிப் பார்ப்பதுபோல் தட்டிக் காட்டி, விரைப்பாய் உள்ள வெண்டைக்காயை வளைத்துப் பார்ப்பது போல் மனித உடலை ஒடித்துப் பார்த்து, காட்டுப் புலியைக் கூண்டினுள்ளே விட்டுக் குத்திப் பார்ப்பது போல அப்பாட்டாளிகளை இருப்புச் சங்கலியால் இறுகப் பிணைத்து நுனியிலே பிரிந்து, இடையிலே சடை போடப்பட்டு, கடையிலே கையில் பிடித்தால் நழுவாது பின்னப்பட்ட சாட்டைக் கயிற்றைக் கையில் கொண்டு, அடிமையின் உடலின் தசை நார்களோடு பின்னும்படியாக அடித்துக் காட்டி, கடையில் ஆட்டுக் கறியைக் கயிற்றிலே தொங்கவிட்டிருப்பதுபோல், கட்டித்தொங்கவிட்டு, கண்ணாடி சாமான்களை ஏலம் போடுவது போல் ஆறறிவுடைய, ஆண்டவனால் படைக்கப் பெற்ற, தியாக பரம்பரையைச் சேர்ந்தவரை விலைக்கு விற்கும் கோரக்காட்சி அமெரிக்காவில் அன்று அங்கெங்கு எனாதபடி எங்கெங்கும் நர்த்தனமாடியது.

இப்படிக் கொடுமை செய்யப்பட்ட அடிமைகள் செய்த குற்றம்தான் என்ன? காடழித்து, நாடு படைத்து, காட்டாறுகளை அடக்கி, கல்லும் முள்ளும் நிறைந்த கரம்பான நிலத்தைத் திருத்திக் கழனியாக்கிப், புதரிலிருந்து பாயும் புலிகளாலும், பாறைகளிலிருந்து படமெடுத்துவரும் பாம்புகளாலும், ஆறுகளிலும் நீர் நிலைகளிலும் வாழும் முதலைகளாலும் துன்புற்று, துவண்டு, பலர் உயிரைப் பணயமாக வைத்து, அமெரிக்காவை மக்கள் வாழும் இடமாகத் திருத்தித் தந்ததுதான்.

ஆனால், இக்கொடூரத்தைக்கள்ளங் கபடமற்ற எந்த இளம் உள்ளம்தான் கண்டிக்காமல் “சும்மாயிருப்பதே சுகம்!” என்று இருந்து விடமுடியும்? நீக்ரோக்களின் உழைப்பை உறிஞ்சி, அவர்களை அதே நேரத்தில் அடிமைப் படுத்திய கறுகிப்போன உள்ளங் கொண்ட அவ்வெள்ளையர்களின் எதேச்சாதிகாரத்தை ஒழித்து அடிமைகளுக்கு விடுதலைப் பெற்றுத் தர, சில வீர உள்ளங் கொண்ட வெள்ளையர்களும் தோன்றாமலில்லை; அப்படித் தோன்றியவர்களில் தலையாய வீரரே, அடிமைத்தளை அறுத்த ஆபிரகாம்லிங்கன்.

அடிமைகளின் அவல நிலைகண்டு துடித்த பிரௌன் அவர்களின் அடிமைத்தளையை உடைத்தெறிய கங்கணங் கட்டிக் கொண்டார்.

அப்பொழுது அமெரிக்காவின் வட பாகத்தில் அனேகமாக அடிமை முறை இல்லாமலே ஒழிந்து போயிருந்தது. தென்பாகத்திலிருந்த குடியேற்ற நாடுகளில்தான், அடிமை முறை தாண்டவமாடியது. அத்தென் பாகத்திலிருந்தவர் விடுதலை பெறஇருந்தது ஒரே வழிதான். அடிமைகள் விடுதலையை ஆதரிக்கும் வடபாகத்திற்கு; தம் எஜமானர்க்குத் தெரியாமல் தப்பி ஓடி விடுவதுதான். இவ்வாறு தப்பி ஓடி வரும் அடிமைகள் ஆங்காங்கே தங்கிச் செல்ல உதவியாக வீடுகள், தங்குமிடங்கள்இரகசியமாக அமைக்கப்பட்டிருந்தன. சில சமயங்களில் தப்பிச் செல்லும் இவ்வடிமைகள் அகப்பட்டுக் கொள்வதுமுண்டு. அப்படி சிக்கிக் கொண்டவர்கள் சுட்டுக் கொல்லப்படுவர்.

இப்படியே நீண்ட நாட்களுக்கு, நீக்ரோக்களை வடபாகத்திற்கு இரகசியமாக ஓடச்செய்வது இயலாது என்பதை உணர்ந்த பிரௌன், நேரடியாகத் தெற்கேயுள்ள குடியேற்றநாடுகளில் ஒவ்வொரு ஊராகப் புகுந்துத்

தாக்கி, ஆங்காங்கு உள்ள அடிமை களை விடுதலை செய்து அனுப்ப வேண்டும் எனத் திட்டமிட்டார். அதற்காக ஓர் இரகசியப் படையும் சேர்க்க முயற்சித்தார். ஆனால், அவர், அப்பொழுது வேலை பார்த்து வந்த பகுதி தென்பாகத்தினருக்குச் சொந்தமான குடியேற்ற நாட்டி னுள் எல்லைப் பகுதியில் இருந்தது. ஆகவே அவர் முயற்சி கைக்கூட வில்லை

ஓர்நாள் பத்து மைல்கள் தூரத்தி லிருந்த ஓர் ஊரில் நடந்த தேர்தலில் அடிமை முறை எதிர்ப்பாளருக்கு உதவி செய்வதற்காகத் தன் மூத்த புதல்வர்கள் ஐவரோடு சென்றிருந் தார் பிரௌன். இச்சமயத்தில், அடி மைகளை விடுதலை செய்யப் பாடுபடுகி றார் பிரௌன், என்பதை யறிந்து ஆத்திரங் கொண்ட அண்டை அயல் வீட்டார்கள் காலிகளைக் கூட்டிக் கொண்டு பிரௌன்வீட்டில் நுழைந் தனர். ஆனால் வீட்டில் பிரௌன் காணப்படவில்லை. காரியம் கைகூட வில்லை எனக் கண்ட அக் காலிக் கல கக்கூட்டத்தினரின் கோபம் அதிக மாகியது. அடிமை முறையை ஆதரிக் கும் சூரர்களல்லவா? கோபம் வெறி யாக மாறி, பிரௌனின் மகள் மரும கள் மீது பாய்ந்தது. அம்மகளிர் களைக் கற்பழித்து மானபங்கம் செய் தனர். பிரௌனும், அவரின் புதல் வர்களும் திரும்பி வந்தனர். நடந்ததை அறிந்து உளந்துடித்தனர். அதன் விளைவு அடுத்த நாளே தெரிந் தது. கலகத்திற்குக் காரணமான அயல் வீட்டார் ஐவரின் பிணங்களைப் பக்கத்திலுள்ள காட்டில் கழுகுகள் கொத்தித் தின்றுகொண்டிருந்தன. இதையறிந்த அரசாங்கம் பிரௌனை யும், அவரின் குடும்பத்தாரையும் "ராஜ துரோகிகள்" எனக் குற்றம் சாட்டியது. வீட்டிற்குப் போலீசார் வருமுன்பே, செய்தியைத் தெரிந்து கொண்ட பிரௌன் பலமைல்கள் தூரத்திற் கப்பாலிருந்த ஓர் பெருங் காட்டிற்குத் தன் குடும்பத்தை ஓர் இரவில் கொண்டு சென்றுவிட்டார். அங்கு சென்ற சில நாட்களில் பிரௌன் வழிப்பறிக் கொள்ளைக் கூட்டத்தாரைத் தன் தோழர்களாக் கிக்கொண்டார். அவர்கள் பிரௌன் அமைத்த படையிலே தொண்டாற்ற முன்வந்தனர். அடிமை முறையை ஒழித்துக் கட்டும் திருப்பணியில் பெரும் பங்கு கொண்டனர்.

அக்காட்டை ஒரு படைப் பயிற்சிக் கூடமாக ஆக்கினார் பிரௌன். காட்டின் நடுவில் அடர்ந்த புதர்களுக் கிடையில் அவர் தங்கியிருந்த இடம் வீரர்களின் பாசறையாக மாறியது. அவரின் தலைமையின் கீழிருந்த அப் படையில் பழக்கப் பட்ட அரசாங்க இராணுவத்திலிருந் ததை விட அதிகமாக ஒழுங்கு முறை இருந்தது. அப்படையில் அறுவர் அவர் புதல்வர்கள்.

1856-ம் ஆண்டு மே மாதம் 30-ம் தேதி திடீரென்று பிரௌனின் புதல் வர்கள் இருவர், அடிமைமுறை காப் பாளர் படையினால் பிடிக்கப் பட்ட னர். பிடிபட்ட பிரௌனின் புதல் வர்கள் பட்ட பாடு கொஞ்ச நஞ்ச மன்று. கடும் வெய்யிலில் காலில் செருப்பின்றிப் பல மைல் தூரம் நடத்தி இழுத்துச் செல்லப் பட்ட னர். குடிக்க நீரோ, உண்ண உண வோ தராமல் மூன்று நாட்கள் சித்தி ரவதை செய்யப் பட்டனர். இச் செய்தியை அறிந்தான் பிரௌன்.

உடனே ஒன்பது குதிரைகள் காற்று வேகத்தில் அப்படை சென்ற திசை நோக்கிப் பறந்தன. அடிமை முறை காப்பாளர் படை, இந்த ஒன் பதின்மர் அடங்கிய படையால்

முறியடிக்கப் பட்டு ஓடியது- ஆனல் பிரௌனின் புதல்வர்கள் அதற்குள் கொலை செய்யப்பட்டுவிட்டனர்.

இதன் பின் பிரௌன் அடிமை முறை தாண்டவமாடுகிற ஒவ்வொரு நகரமாகத் தாக்கி, அடிமைகளை விடுதலை செய்வதற்கான முதல் முயற்சிகளில் ஈடுபட்டார்.

* * *

உயர்ந்த குன்றுகள். அதனிடையே சலசல வெனப் பாய்ந்தோடிக் கொண்டிருக்கும் இரு பெரும் ஆறுகள். இவ்வாறுகளின் பெயர்தான் 'பொட்டமாக்', 'ஷெ ஞ ன் டோ' என்பனவாகும். இவைருகில் ஹார்பர்ஸ் பர்ரி என்ற ஊர் உள்ளது. இவ்வூரில்தான் முதலாளித்வ மிருகத்தனம் தலைக்கேறி அடிமைகள் சித்திரவதை செய்யப்பட்டு வந்தனர். அதோ பார்! அந்த இயந்திர சாலைகளிலுள்ள புகை போக்கிகளிலிருந்து எப்பொழுதும் புகைவந்துகொண்டே இருக்கிறதல்லவா? அது போன்றுதான் ஆங்குள்ள அடிமைகள் சதா சர்வ காலமும் உழைத்து இரத்த வேர்வை சிந்திக் கொண்டிருக்கின்றனர். இந் நிலையை மாற்றியமைக்க வேண்டுமென பிரௌன் உறுதி கொண்டார். அதற்கான முன்னணி வேலையையும் துவக்கினர்.

தகர்க்க வேண்டிய இடம், தாக்கப் படவேண்டிய இயந்திரசாலை, பிடித்துக் கொள்ளவேண்டிய ஆயுதச் சாலை, தீ மூட்டவேண்டிய வெடி மருந்துச்சாலை, கைது செய்யப் பட வேண்டிய கனவான்கள், அதற்கான வழி முறைகள் முதலியவைகளை பிரௌன் தானே நேரில் மாறுவேடம் பூண்டு சென்று உளவு தெரிந்து கொண்டுவந்தார். அவ்வூரினின்றும் மூன்று மைல் தொலைவில் துப்பாக்கிக் குண்டுகளும் ஆயுதங்களும் மிக இரகசியமாகக் கொண்டுவந்து சேர்க்கப்பட்டன.

1859-ம் ஆண்டு அக்டோபர் 16ம் நாள் நள்ளிரவில் பிரௌனின் தலைமையின் கீழ் 22 போர் வீரர்கள் தக்க ஆயுதங்களோடு புறப்பட்டனர். முதலில் தந்திக் கம்பிகள் அறுக்கப்பட்டன. பின் அவ்வூரில் நுழையுமிடத்திலுள்ள, பொட்டமாக் ஆற்றின் பாலத்தில் காவல் புரிந்த காவலாளிகளை மிகவும் தந்திரமாகக் கொலை செய்து அவ்வாற்றிலேயேதள்ளினர்.

பின் பிரௌன் தன் படையுடன், ஆயுதச் சாலையை முதலில் கைப்பற்ற முயன்றார். ஆனல் தந்திரமாகத் தப்பி ஓடிய ஊர்க்காவலாளி ஒருவன், இச் செய்தியை ஊர் மக்களிடைக் கூறிப்பெரும் பரபரப்பை உண்டாக்கி விட்டான். அப்பரபரப்பு ஊராரிடையே, பயத்தை அதிகமாக்கவே, அது பிரௌனுக்குச் சாதகமாகியது. அச்சமயத்தில் அவ்வூரின் வழியே செல்லும் வாஷிங்டன் எக்ஸ்பிரஸ் புகைவண்டிகிளம்பியது. உடனே பிரௌன் ஆட்கள் எக்ஸ்பிரஸைப் போக விடாது தடுத்து நிறுத்தினர். மூன்றுமணி நேரம் எக்ஸ்பிரஸ் அப்படியே நின்றது. பிரயாணிகள் கூண்டில் அடைக்கப்பட்ட கிளிகளாயினர். ஆனல், திடீரென்று பிரௌன் படையைச் சேர்ந்த ஒருவன் சுடப்பட்டான். நிலைமை படுமோசமாகி விடும்போல் தோன்றியது, ஆகவே பிரௌன், "எக்ஸ்பிரஸை" செல்ல அனுமதித்து விட்டார். பின் ரயில்வே தண்டவாளங்கள் உடைக்கப் பட்டன. 'எக்ஸ்பிரஸ்' சென்றது பின் பெரும் ஆபத்தாகவே முடிந்தது.

இந்நிலையில் பிரௌனின் வெற்றி நீக்ரோக்களின் உடனடி எழுச்சி

யைப் பொருத்திருந்தது. ஆக்வே அவர் அடிமைகளை விடுதலை செய்யும் படிக் கூறி ஓர் படையை அனுப்பினார். அப்படை அடிமைகளை விடுதலை செய்ததோடல்லாமல், அவர்களின் எஜமானர்களையும் சிறைப்பிடித்துக் கொண்டு வந்து நிறுத்தியது. விடுபட்ட அடிமைகள் படையில் சேர்க்கப் படவே படை பல மடங்காக வளர்ந்தது. ஆனால் அப் படை, உடனடியாக நடக்கப் போகும் போரில் வெற்றிபெறும் அளவுக்குப் பலம் பொருந்தியதாக இல்லை. மறுநாள் பொழுது புலர்ந்தது. வெற்றி பிரௌன் பக்கமே இருப்பது போல் தோன்றிற்று. ஆனால் மாலைப் பொழுது மங்கியது போல், அவரின் வெற்றியும் மாலையுடன் மங்கியது. காரணம், விடப்பட்ட வாஷிங்டன் எக்ஸ்பிரஸ்தான். அரசாங்கப் படைகள் பிரௌன் படையைவிடப் பல மடங்காக வந்து தாக்கவே பிரௌன் படை தோற்றது. குண்டு பட்டு வீழ்ந்த பிரௌனை அரசாங்க இராணுவம் கைது செய்தது.

நீதி மன்றத்தில் குற்றவாளிக் கூண்டில் பிரௌன் நிறுத்தப்பட்டார்! "ஏழை அடிமைகள் உற்ற துன்பமும் துயரும் என் உள்ளத்தைத் துடிக்கச் செய்தன. அதனால்தான் நான் இங்கு நிற்கிறேன்" என்றார். அவர், "என் மீதுள்ள வழக்கை நீங்கள் எளிதில் தீர்த்து விடலாம்! ஆனால் இவ்வடிமைகள் வழக்கு பிரச்னை இன்றோடு தீர்ந்து விடப் போவதில்லை" என தன் வாழ்க்கைப் பற்றிக் கவலையுறாது, நீதி மன்றத்திலும் அடிமைகள் வழக்கை எடுத்துரைத்தார். "அடிமைகளைத் தூண்டி விட்டதோடல்லாமல், பல கொலைகளுக்கும் காரணமாயிருந்ததால், பிரௌனுக்குத் தூக்குத் தண்டனை அளிக்கிறோம்." என்று தீர்ப்புக் கூறினர் நீதிபதிகள். அத்தீர்ப்பை மலர்ந்த முகத்துடன் ஏற்றுக் கொண்டார் பிரௌன். அத் தீர்ப்பு அவர் என்னேரத்திலும் எதிர்பார்த்திருந்ததுதானே!

"நான்—ஜான்பிரௌன்—நிச்சயமாக நம்புகிறேன், இப்பாழும் நாட்டின் கொடுங் குற்றங்கள் யாராலும், குருதி கொட்டப்படாமல் கழுவப் படமுடியாதவைகள். ஆனாலும், இவ்வளவு குருதி கொட்டாமலே கூட இக்காரியத்தைச் சாதித்திருக்க முடியும் என்று நான் நினைக்கிறேன்" என்று எழுதித்தந்தார், தூக்குமேடையில் ஏறுமுன், அதிகாரிகள் பேசக் கூடாது என்று கட்டளை யிட்டதால். "நான் எச்சமயத்திலும் தயாராகத்தான் இருக்கிறேன். நீங்கள் என்னை அனாவசியமாகக் காக்க வைக்காதீர்கள்"—தூக்குமேடையில்அந்த இலட்சிய வீரனது இறுதிச் சொற்கள் இவையே.

பலகை நகர்ந்தது......

"தியாக வீரன் பிரௌன்" என்று அமெரிக்கா அன்று முதல் புகழ்பாடத் தொடங்கியது. அந்நாள் தான் ஆயிரக்கணக்கான மக்களின் அடிமைத்தளை தெறிக்கப் போகிறது என்பதின் அறிகுறி நாளாயிற்று. அந்நாள் எதேச்சாதிகாரத்தின் சாவு மணி அடிக்க ஆரம்பித்த முதல் நாள். அந்நாளே மனிதன் எவனும் மனிதனோடு மனிதனாக உரிமை பெற்றே தீருவான் என்பதை அறிவிக்கும் விடிவெள்ளி தோன்றிய நாள்.

அவ்வீரனின் தியாகியின் இலட்சிய மொழிகளே அடிமைத்தளையை உடலில் இருந்து மட்டுமின்றி உள்ளத்திலிருந்தும் அறுத்து வீழ்த்தும் அரிய ஆயுதமாயிற்று. அடிமைத் தளையும் அறுந்தது. பிரௌனின் தியாகம் வீண் போகவில்லை.

உழத்தி

"ரவி"

★

ஆற்ரு வெயிலின் கொடுமையினுல்
அனலால் வாடிய பயிரேபோல்
சேற்றின் துளிகள் சேலையிலே
செல்வக் குழவிபோல் துள்ளியாட
சோற்றினை வார்க்கக்-களையெடுப்பாள்—உலகச்
சோர்வினை அகற்றக் களையெடுப்பாள்!

கரையின் ஓரம் மரக்கிளையில்
கட்டிய தொட்டிலில் கண்வளரும்
சிறந்திடு காதற் பொன்மலரில்
சிந்தை வண்டு சுற்றியாட
பறிப்பாள் பாழ்செயும் களைகளையே—வாழ்வுத்
துயரை அழித்திடும் தமிழிசைபோல்!

பச்சைப் புல்லைத் தின்றந்த
பசுவும் பாலினைச் சுரப்பதுபோல்
உச்சி வெயிலில் அவ்வுழத்தி
ஊன்றிய இரத்த வியர்வினையே
பச்சைப் பயிராய் நிலமகளும்—மாற்றி
பாரினை வளர்க்க ஈந்திடுவாள்!

தென்றலால் ஒலிசெயும் தளிரேபோல்
தேனிதழ் கிழித்துப் பண்பாய
செந்நெல் எங்கும் செழித்துயர
செறிந்த களைகளை எடுத்தெறிந்தே
புன்மை வறுமையைப் போக்கடிப்பாள்—அவள்
புவியைக் காக்கும் பெண்தெய்வம்!

ஒலிக்கும் சிலம்பு

இரா. குழூஉத்தலைவனார்.

மலரில் வீழ்ந்த வண்டு

மாதவிக்கு ஏற்ற மணமகனைத் தேடுவதில் அவள் தாய் சித்திராபதிக்கு இப்போது எந்த வகையான கவலையும் கிடையாது. அழகிற் சிறந்த மாதவியின் அருள் நோக்கிற்காகவே ஆயிரக் கணக்கான இளைஞர்கள் அவள் காலடியில் தவங்கிடந்துக் காத்திருக்கும் போது அவள் ஏன் அதைப் பற்றி அலையவேண்டும்! ஆயினும் அவளுக்கு ஓர் கவலை உண்டாயிற்று. மாதவிக்கு ஏற்ற அழகனையாவது எங்காவது தேடிப் பிடித்து விடலாம். அவன் செல்வனாகவும் இருக்கவேண்டுமே. செல்வனென்றால் நாளொன்றுக்கு ஆயிரத் தெட்டுக் கழஞ்சு பொன் அளிக்கக் கூடியவனாக அல்லவா இருக்க வேண்டும்! சித்திராபதியின் எண்ணம் அழகனாக வேண்டும் என்பது கூட இல்லை. பெருஞ் செல்வனாக இருப்பவனையே அவள் நாடி நின்றாள். பரத்தையர் குடிக்கு ஏற்ற பண்புகள் பலவும் நிரம்பிக் கிடந்தன அவளிடம். அவள் வயது முதிர்ந்தவள். தொழிலில் கை தேர்ந்தவள். எத்தனையோ குடி மக்களை அழித்துக் கற்புடைய மங்கையர் பலரின் கண்ணீர்க் கறை பட்ட செல்வம் அவளிடத்தில் சேர்ந்து கிடந்தது. இன்னும் அவளுக்கு நிறைவு என்பதே கிடையாது.

மாதவிக்கு இதில் சிறிது மனத்துன்பம் ஏற்படத்தான் செய்தது. ஆயினும் அவள் அதை வெளிபிட அஞ்சினாள். தன் இளமை உணர்ச்சிகளை வெளியிடத் தயங்கியது அவள் உள்ளம். அவள் நிறைந்த கலை உணர்ச்சி கொண்டவள். கண்டவர் மயங்கும் கட்டழகி. இணையற்ற அறிவும் பெற்றவள் ஆகவே அவள் உள்ளம் அழகு மிக்க ஒருவனை அதிலும் கலையுணர்ச்சி உள்ளவனைத் தான் நாடி நின்றது. அவள் பலரைக் கூடி வாழும் விலங்கு வாழ்க்கையை—பரத்தையர் தொழிலை அடிப்படையிலேயே வெறுத்து வந்தாள். பொருட் பெண்டிரின் பொய்ம்மை முயக்கத்தால் இருட்டறையில் நின்று ஏங்கித் தவிக்கும் எத்தனையோ குடும்பங்கள் அவளுக்குத் தெரியும் தன் தாய் சித்திராபதியின் வழியாக.

உள்ளபடியே ஒருவனை மணந்து ஒன்றிய காதல் வாழ்க்கை நடத்திக் களங்கத்தைப் போக்க எண்ணியது அவள் இளமை உள்ளம்.

இவ்விதக் குழப்பங்களுக்கிடையே சித்திராபதி ஒரு மாலையைக் கூனி யென்ற பெயரையுடைய ஓர் ஏவல் மகளின் கையில் கொடுத்து அம்மாலையை அரசர்கள் தெருவில் விலை கூறச் செய்தாள். அதன் விலை ஆயிரத் தெட்டுக் கழஞ்சு பவுன் ஆகும். இவ்வளவு தொகையை எவன் கொடுத்து இதனை விலைக்குப் பெறுகின்றானோ அவனே மாதவியை மாலையிடும் மணமகன் ஆவான் என்று கூறும்படிச் செய்து காவிரிப்பூம் பட்டினத்துச் செல்வர் உலவும் கடைத் தெருவிற்கு அனுப்பினாள்.

"நூற்றுப் பத்துஅடுக்கி எட்டுக் கடைநிறுத்த
வீறுயர் பசும்பொன் பெறுவது இம்மாலை,
மாலை வாங்குநர் சாலும்நம் கொடிக்கு, என
மானமர் நோக்கி, ஓர் கூனிகைக் கொடுத்து
நகர நம்பியர் திரிதரு மறுகில்
பகர்வனர் போல்வதோர் பான்மையின் நிறுத்த."

[நூற்றுப்பத்து அடுக்கி எட்டுக் கடைநிறுத்த: நூற்றைப்பத்துமுறை அடுக்கி அதனோடு எட்டைச் சேர்த்த (1008). வீறு: பெருமை. வாங்குநர்: வாங்குகின்றவர்கள். சாலும்: மணமகனாகத் தகுவர். மான் அமர்: மான் போன்ற. பகர்வனர்: விலைக்கு விற்போர்]

பண்டங்களை விற்பவர்களைப் போலத் தெருவில் மாலையுடன் நின்ற கூனியைக் கோவலன் கண்டான். மாதவியின் நடனத்தால் முன்னமேயே உள்ளத்தைப் பறிகொடுத்திருந்தான் அவன். ஆடல் பாடலில், அவனுக்கும் மிகுந்த பயிற்சி உண்டு. அக்கலைகளில் அளவற்ற காதல் கொண்டு பயின்ற வன் அவன். எனவே மாதவியின் ஆடல் பாடல்களில் அவன் தன்னை மறந்து ஈடுபடவேண்டியதாயிற்று. மற்ற வகைகளில் கண்ணகியை விட மாதவி அழகிலோ அவன் பால் கொண்ட அன்பிலோ சிறந்தவள் அல்லள். என்பது சிலப்பதிகாரம் முழுவதும் நன்கு படிப்பவர்கள் அறிவர். ஆகவே பள்ளங் கண்ட விடத்துப் பாய்ந்தோடும் வெள்ளம் போல அவளின் ஆடலின்பத்தில் பாய்ந்தது அவன் கலை உள்ளம்.

கூனியின் கையில் உள்ள மாலையை ஆயிரத் தெட்டு கழஞ்சு பொன் கொடுத்து உடனே வாங்கி விட்டான் கோவலன். கூனியும் அவனை அழைத் துச் சென்று மாதவியின் மாளிகையில் விடுத்து அகன்றாள். மாதவியும் கோவலனுடைய பண்புகளை முன்பே கேள்வியுற்றவள். அதிலும் செவ் வேள் போன்ற அவன் வடிவத்தை நேரில் கண்டதும் அவள் மட்டற்ற காதல் கொண்டாள். தனக்கேற்ற காதலன். தான் நீண்ட நாளாகக் கற் பனையில் கண்டு வந்த கட்டழகன் அவனே என்று மகிழ்ந்து அவனை வர வேற்றுத் தழுவினாள்.

கோவலனுக்கு இவ்வின்பம் முன்னமேயே கண்ணகியிடத்தில் கிட்டி யதுதான். ஆயினும் கண்ணகி அவன் மனைவி. அடிக்கடிப் பழகிப் போன வள். சற்று இளமை நெகிழ்ந்தவளுங்கூட.

மாதவியோ வண்டுபடாத மணமலர். காதலன் கைப்படாத கட்டிள மங்கை. இளமை தன் எழில் முழுவதையும் வஞ்சமின்றி வழங்கியிருந்ததால் இன்பத் தேன் துளும்பி நிற்கும் பருவ மடந்தை அவள்.

மாதவியின் இன்ப அணைப்பில் மயங்கிய கோவலன் அல்லும் பகலும் அவளைப் பிரியாது உடனுறைவானாயினன். தாம் வீழ்வார் மென் தோள் துயிலினும் தாமரைக் கண்ணான் உலகமும இனிமை தருவதோ! என்ற பாடம் அவனுக்கு மிகப் பழமையானதல்லவா! மலரில் வீழ்ந்து தேனில் சிக்கி மயங்கிக் கிடக்கும் வண்டின் நிலையை அடைந்து விட்டான் அவன்.

கற்பிற் சிறந்த காதல் மனைவியையும் அன்பிற் சிறந்த அருமைப் பெற்றோர்களையும் அவன் மறந்து விட்டான் போலும்! மாதவியை அவன் பிரிய நினைத்தாலும், அவன் உள்ளம் பிரிய மறுத்தது. தையலார் மையலில் பட்டோர் தமக்கு ஒரு மதியுண்டாமோ! வீட்டைப் பற்றிய எண்ணமே அவனுக்கு அடியோடு இல்லை. மதுவில் வீழ்ந்த வண்டு, விளக்கில் வீழ்ந்த விட்டில் சேற்றில் சிதறிய தீம்பால் இவை எப்போதுமே மீள்வதில்லை யல்லவா!

"மாமலர் நெடுங்கண் மாதவி மாலை
கோவலன் வாங்கிக் கூனி தன்னொடு,
மணமனை புக்கு மாதவி தன்னோடு
அணைவுறு வைகலின் அயர்ந்தனன் மயங்கி
விடுதல் அறியா விருப்பினன் ஆயினன்
வடுநீங்கு சிறப்பின்தன் மனையகம் மறந்தென்".

[அணைவுறும் வைகலின்: கூடித்தழுவுகின்ற காலத்தில். அயர்ந்தனன்: சோர்ந்து. வடுநீங்கு சிறப்பின் : குற்றம் நீங்கிய சிறப்பையுடைய. மறந்தென் :மறந்து]

அச்சில்!

பேசும் பிணம்

(வரலாறு)

இராதாமணாளன்

தீட்டியது

விவரங்கட்கு :

திராவிடன் பதிப்பகம்

P. B. 18 வேலூர் (வ. ஆ.)

உரைகல்

முல்லைக் காடு

புரட்சிக்கவிஞர்

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்களின் கவிதைகளைப் படிப்போருட் சிலர் அவர் தன் கட்சிக்காகவே அவ்வாறு பாடுகிறார் என்று தவறாகக் கருதுகின்றனர். அவரது உள்ளம்-கட்சிச் சார்பற்ற நிலையிலும் -புரட்சி மணம் வீசுவதாகவே இருந்துள்ளது என்பதற்கு முல்லைக்காடு ஓர் எடுத்துக்காட்டு.

அவரது கவிதைகளால்-இன்று தமிழகமே முல்லைக் காடாக விளங்குகின்றது. முல்லைக் காட்டிலே, தமிழகம், இயற்கை. காதல், நகைச்சுவை. அறிவுறுத்தல் ஆகிய பல பகுதிகளும் இடம் பெற்றுள்ளன. படிக்கப் படிக்கத் தெவிட்டாத தேனென இனிக்கும் இதற்கு விலையுமுண்டோ?.

கிடைக்குமிடம் : ஞாயிறு நூற் பதிப்பகம் அம்பலத்தாடு ஐயர் வீதி, புதுச்சேரி. விலை அணு 12.

தாய்நாட்டின் நலிவு

மாவண்ணு தேவராசன்

இளங் கவிஞரான இதன் ஆசிரியர்-இனிய எளிய அழகு தமிழில்-புரட்சிக கவிஞரின் நடையைத் தழுவி நாட்டின், ஒவ்வொரு துறையிலும் சூழ்ந்துள்ள கேடுகளைச் சுட்டிக் காட்டி அவற்றைப் போக்கும் வழியைச் சித்தரிக்கிறார். நாட்டின் நலிவுபோக்க எழுச்சியூட்டும் மருந்தாகின்றது.

கிடைக்குமிடம் : இலக்குமி நூல் பதிப்பகம், திருவத்திபுரம் (வ. ஆ.) விலை அணு 3.

தாமரைக் குமரி

மு. அண்ணுமலை

கவிதை எழுத எடுத்த ஓர் இளைஞரின் வெற்றி மாலையே இந்நூல். இதில் அமைந்துள்ள ஒவ்வொரு கவிதை மலரும் நுகருவோருக்கு இன்பம் மட்டுமின்றி, அறிவுப் பயனும் நல்குகின்றது. "இலைப் பச்சைத் தளிர்மேனி இளமங்கை ஒருத்தி-எழில் காட்டி இதழ் காட்டிக் கொஞ்ச வருகிறாள்." அவள் பெயரே தாமரைக்குமரி.

விற்பனையாளர்:—கரும்பு பதிப்பகம், புதுக்கோட்டை. (குமரிக்கு விலை இல்லை.)

தாழ்வு மனப்பான்மை

முல்லை முத்தையா

பலரோடும் பழகுங் காலத்தே, பலவித மனப்பான்மைகளையும் கண்டறிந்து-பிற நாட்டார் கருத்துரைகளையும் கற்றுணர்ந்து-இந்நூல் தீட்டப்பட்டுள்ளது. தாழ்வு மனப்பான்மையை அடியோடு வீழ்த்திய தலைவாணர் என். எஸ். கே யின்

முன்னுரையைப் பெற்றுள்ளது. இம்முயற்சி வரவேற்கப் படவேண்டியதாகும்.

வெளியிடுமிடம்:— முத்தமிழ் நிலையம். ஜார்ஜ் டவுன். சென்னை-1. விலை அணு 12.

மக்கள் ஆட்சி

என். இ. பாலகுரு

இக்கவிதைக் கதை-தெள்ளிய நீரோடை போன்ற கவிதையோடும் நீர்வீழ்ச்சி போன்ற கதையோடும் அமைந்து மக்களாட்சியை மலரச் செய்கிறது. அறிஞர் அண்ணாவின் சிறப்புரை கொண்டது.

கிடைக்குமிடம் : அருச்சுனன் நிலையம். ஈரோடு. விலை அணு 4.

இளைஞர்களுக்கு

டி. எஸ். வேலன்

இன்று, இளைஞர்கள் கட்சிகள் காரணமாக மாறுபட்டுப் பாழாவதினின்றும் தடுத்து-நாட்டிற்கான நல்வழியில் பாடுபடச் செய்ய-இளைஞர்களின் உள்ளங்களை மாற்றியமைக்க -வாலிபரான இதன் ஆசிரியரின் அரிய முயற்சியே இந்நூல். முகப்புப் படத்தின் கருத்தே உள்ளேயும் பொதிந்து கிடக்கின்றது.

வெளியிடுவோர்: தமிழ் இளைஞர் கழகம், 13-ஆண்டியப்ப முதலித் தெரு, வண்ணையம்பதி; சென்னை-21. விலை அணு 8.

திராவிடஸ்தான் வேண்டாமா?

(விவாத நூல்)

இத்தலைப்புக்குரிய விடையைப் பொதுமக்கள் உணர்ந்து கொள்ளும் வகையில், 'போர்வாள்' கொண்டு நடத்திய அறிவுப்போர் இது கம்யூனிஸ்டு தோழர் கே. வி. சங்கரன் அவர்கள் தொடுப்பும்-திராவிடத் தோழர், மா. இளஞ்செழியன் அவர்கள் மறுப்பும் உண்மை விளக்கம் பெறும் வகையில் அமைந்துள்ளன.

வெளியிடுவோர்: பகுத்தறிவுப் பாசறை, 147. பவழக்காரத் தெரு, சென்னை 1. விலை அணு 8.

அவள் விபசாரியா?

எஸ். ஏ. நாதன்

பொருத்தமற்ற மணத்திற்காளான பெண், கற்பிக்கப் பட்ட கடமையினின்றும் விலகிடும்போது, சமுதாயம் அவளுக்கிழைக்கும் கொடுமையையும், தெளிவு பெற்ற ஒருத்தி எப்படிக் கருதுவாள் என்பதையும், கனவுலகிலே அவள் நீதி மன்றத்திலே நிகழ்த்தும் வாதமாகப் படம் பிடித்துள்ளார் இதன் ஆசிரியர்.

வெளியிடுமிடம்: புரட்சிப் பூங்கா அமுத பிரசுராலயம், குழித்தலை திருச்சி (ஜி.) விலை அணு 9.

புதிய பாதை

இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.

இதன் ஆசிரியர் அவ்வப்போது எழுதிய சிறந்த சில கட்டுரைகளின் தொகுப்பே இந்நூல். அவருக்கே உரிய செந்தமிழ் நடையில் அறிவு விருந்தளிக்கிறார்.

கிடைக்குமிடம்:ஞாயிறு நூற்பதிப்பகம், புதுச்சேரி. விலை அணு 12.

சமதர்மம்

அறிஞர் அண்ணாதுரை

அவர்களின் வானொலிப்பேச்சு.

கிடைக்குமிடம்: திராவிடன் பதிப்பகம், வேலூர் (வ.ஆ.)விலை அணு 4

ரேடியோவில் அண்ணு

வானொலியில் அறிஞர் நிகழ்த்திய அமிழ்தினுமினிய சொற்பொழிவுகள் விலை அணு 12.*

உலகப் பெரியார் காந்தி

பெரியார் காந்தியாரின் தன்னல மற்ற தொண்டினை மலை முகட்டுத் தீயென விளங்கத் தீட்டியுள்ளார் அறிஞர். விலை ரூபாய் ஒன்று.

* கிடைக்குமிடம்:— திராவிடப் பண்ணை, தெப்பக்குளம், திருச்சி.

திருக்குறள் ஐம்பது

மொ. அ. துரைஅரங்கனர் எம். ஓ.எல். வித்துவான். ப. மங்கையர்க்கரசியார்.

இந்நூல்-அரசியலாரின் திட்டத் திற்கு இணங்க, உயர்நிலைப் பள்ளி யின் முதல் படிவ (I-பாரம்) மாண வர்கட்காகத் தொகுக்கப்பட்டுள்ளது. சிறுவர்க்கு ஏற்ப எளிய, இனிய உரையும் விளக்கமும் கருத்தும் தரப் பட்டுள்ளன. முதலில் ஒரு கேள்வி; அக்கேள்விக்குப் பதிலாகக் குறள்; என்று கையாளப்பட்டுள்ள புது முறை சிந்தனையைத் தூண்டி மாண வர்க்குப் பெரிதும் பயன் நல்கும் திறத்தது.

இந்நூலின் வருவாய் முழுமை யும் மாகாணத் தமிழாசிரியர் கழகத் தைச் சேருமாதலால், தமிழாசிரியர் கள் யாவரும் தம்தம் பள்ளி மாண வர்களை வாங்கச் செய்வது மூலமாக கழகத்திற்கு ஆக்கமளிப்பார்கள் என்று உறுதியாக நம்புகிறோம்.

வெளியிட்டது: மாகாணத் தமிழா சிரியர் கழகம், 2-சாலைவிநாயகர் கோவில் தெரு. சென்னை-1. விலை அணு 5.

‘வெண்மதி’ (மாதவெளியீடு)

ஆசிரியர்:—டாக்டர். டி. எஸ். இராசலட்சுமி

பெண்கள் தமது சிறு ஓய்வு நேரத்திலும் படிக்கக் கூடிய பல கட்டுரைகளோடு-பெண்களுக் கென் றே வெளிவருகிறது.

வெளியிடுமிடம்:—103, அர்மீனி யன் தெரு; சென்னை 1. விலை அணு 6.

‘குருகுலம்’ (மாத வெளியீடு)

ஆசிரியர்: நா. ப. தணிகை அரசு

வள்ளலார் மாணவர் கழகத்தின் வளர்ச்சியைக் கருதி வெளிவருகின் றது.

வெளியிடுமிடம்: ‘குருகுலம்’ வாலா ஜாபாத். விலை அணு 4.

‘வழிகாட்டி’

(மாத மிருமுறை)

ஆசிரியர் : இ. மாணிக்கம்

திராவிட இன மருத்துவர்களின் முன்னேற்றத்திற்காகத் தொண்டாற் றத் தோன்றியுள்ளது.

வெளியிடுமிடம்:—வழிகாட்டி, தெப் பக்குளம், திருச்சி, விலை அணு $1\frac{1}{2}$

‘சினிமா முரசு’

(மாத மிருமுறை)

ஆசிரியர் : செங்கு

சினிமாக் கலையில் சீர்திருத்த நோக்கத்தை வளர்க்க நாட்டுப் பற் றோடும் இன உணர்ச்சியோடும், அழ காக மலர்ந்துள்ளது.

வெளிவருமிடம் : சினிமா முரசு 354, தங்கசாலைத் தெரு, சென்னை 1. விலை அணு 2.

'வாழ்வு' (மாதமிருமுறை)

ஆசிரியர் : டி. நாராயணன்

திராவிடத் திருநாட்டின் வாழ்வுக்குத்தொண்டாற்ற தோன்றியுள்ளது.

வெளியீடுமிடம்:—வாழ்வு, அலுவலகம், புதுக்கோட்டை. விலை அணா 2

'வழிகாட்டி' (மாதவெளியீடு)

ஆசிரியர் : க. அ. புன்னைமுத்து

தமிழ் மக்களுக்குத் தன்னுணர்வு ஊட்டி தலை நிமிர்ந்து வாழப் பணியாற்றப் புறப்பட்டுள்ளது.

வெளியிடுமிடம்: வழிகாட்டி நிலையம், கல்லூரணி, அருப்புக் கோட்டை (வழி.) விலை அணா 4.

'உரிமை' (மாத வெளியீடு)

ஆசிரியர் : ஆ. இரத்தினம்

தாழ்த்தப்பட்டோரின் உரிமைக் குரலாக, அமைந்து அவர்களுக்குப் புத்துணர்வளிக்க மலர்ந்துள்ளது.

கிடைக்குமிடம்:—'உரிமை' 4-6, காக்ரேன் பேசின் ரோடு, வண்ணாரப் பேட்டை, சென்னை 21. விலை அணா 3.

'நட்சத்திரம்' (வார இதழ்)

ஆசிரியர் : எம். ஆர். சுப்பையா

பெயருக்கேற்ற முகப்புடன் பல கருத்துக்களையும் கொண்டு மின்னுகிறது. மதி முகத்தில் மங்காமலும், கருமேகத்தில் மறையாமலும் விளங்குமென எதிர்பார்க்கலாம்.

செயலிடம்: 21 அக்பர்சாகிப் தெரு, சென்னை 5. விலை ஒன்றேகாலணா

'நாடக மண்டலி'

(மாத இதழ்)

ஆசிரியர் : ப. பெரிய சாமி

நாடக வளர்ச்சிக்கான நற்றொண்டு புரிய, பலவித கட்டுரைகளோடும், கவிதைகளோடும்வெளிவருகின்றது.

கிடைக்குமிடம்:—'நாடக மண்டலி' நிலையம் திருச்சிராப்பள்ளி விலை அணா 4

'ஆரம்பக் கல்வி'

(மாத இதழ்)

ஆசிரியர் : பி. வீரராகவன்

சிறுவருக்கான கல்வித் திட்டங்களைப் பற்றிய பல கட்டுரைகளோடு-தொடக்கக் கல்வி வளர்ச்சி கருதி தோன்றியுள்ளது.

வெளியிடுமிடம்:—94—95 புதுத் தெரு-மண்டி, சென்னை-1 விலை அணா 4

'தொழிலாளர்'

(மாதமிரு முறை)

ஆசிரியர் : சி. ம. விசுவாசம்

நீதியும் நட்பும் நிலவி, வீடும் நாடும் உயர, தொழிலாளர் துயரைத் துடைக்க வெளிவருகின்றது.

வெளியிடுமிடம்: —'தொழிலாளர்' தெனொபிலி பதிப்பகம், தல்லாகுளம், மதுரை. விலை ஒன்றரையணா

Edited and Published by K. Anbazhagan M.A., at 10, Vellala St., Purasapakkam, Madras-7
Printed by K.V.T. Srinivasan at Sree Ranga Press, 1, RajahanumanthalalaSt, Madras-5.

K. R. ராமசாமியின்

கிருஷ்ணன் நாடகசபா

15-5-48 முதல் 13-வது வாரம்

திருச்சி

ரெத்தினவேலுத் தேவர் ஹாலில்

அறிஞர் C. N. அண்ணாதுரை, M.A.

தீட்டிய

சிந்தனைச் சித்திரம்

"வேலைக்காரி"

நாடகம்

தினசரி இரவு 10 மணி : ஞாயிறு மாலை 6-30 மணி
திங்கள் நாடகம் இல்லை.

டிக்கட் 3-0-0, 2-0-0, 1-3-0, 0-12-0, 0-6-0

எதிர்பாருங்கள்

எமது புதிய நாடகம் விரைவில்...???

COVER PRINTED AT ORIENTAL PRINTING WORKS, MADRAS. PAPER SUPPLIED BY PARTY